ISSN-2613-828X
வாரமலர்
# யாழ் களரி
விலை 100/=
Jaffna Rakaswaram
yarlgallery@gmail.com
உதயம் : 06 | 05.01.2025 - 11.01.2025 | களரி: 31

# ஒரு தேசியப் போராட்டத்தின் வெற்றியை சர்வதேச அரசியல் தான் தீர்மானிக்கும்

உள்ளூராட்சி சபைத் தேர்தலில் போட்டியிட

## இளைஞர் யுவதிகளுக்கு தமிழரசுக் கட்சி அழைப்பு

06

## தீர்வுத் திட்ட வரைவு தொடர்பில்

தமிழ்த் தேசியக் கட்சிகளின் எம்.பிக்களுடன் பேச முடிவு

02

அரசியல் ஆய்வாளர் ச.அ.யோதிலிங்கம் யாழ்களரிக்கு வழங்கிய பிரத்தியேக நேர்காணல்


03



## வடக்கில் மீண்டும் 10 நாட்களுக்கு மழை!; 6 ஆம் திகதி புதிய தாழமுக்கம்

02

## பங்களாதேசில் மீள கால் பதிக்கும் பாகிஸ்தான்!



08

நீ உருவாகி பிறரை உருவாக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீர்வுத் திட்ட வரைவு தொடர்பில்

## தமிழ்த் தேசியக் கட்சிகளின் எம்.பிக்களுடன் பேச முடிவு

தமிழ் மக்கள் பேரவையின் தீர்வுத் திட்ட வரைவு குறித்து தமிழ்த் தேசியக் கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் கலந்துரையாடுவதற்கு உத்தேசித்திருப்பதாகவும், எதிர்வரும் 7 ஆம் திகதி சிவஞானம் சிறீதரன் எம்.பி. மற்றும் செல்வம் அடைக்கலநாதன் எம்.பி. ஆகியோருடன் கலந்துரையாடி அந்தச் சந்திப்புக்குரிய திகதியைத் தீர்மானிக்கவிருப்பதாகவும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.



நாடாளுமன்றத் தேர்தல் முடிவுகளை அடுத்து எதிர்வரும் காலத்தில் அரசால் புதிய அரசமைப்பு உருவாக்க முயற்சிகள் முன்னெடுக்கப்படும்போது, குறைந்த பட்சம் அந்த விடயத்தில் மாத்திரமேனும் தமிழ்த் தேசியக் கட்சிகள் ஒன்றுபட்டு செயற்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டை வெளிப்படுத்தியிருந்த தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் எம்.பி., அதனை முன்னிறுத்தி இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் சிவஞானம் சிறீதரன் எம்.பி. மற்றும் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் எம்.பி. ஆகியோரைக் கடந்த மாதம் சந்தித்துக் கலந்துரையாடியிருந்தார்.

இவ்வாறானதொரு பின்னணியில் இதன் அடுத்தகட்ட நகர்வுகள் குறித்து கஜேந்திரகுமாரிடம் வினவியபோது, எதிர்வரும் 7 ஆம் திகதி நாடாளுமன்றக் கூட்டத் தொடர் நடைபெறவிருக்கும் நிலையில், அன்றைய தினம் சிறீதரன் மற்றும் செல்வம் அடைக்கலநாதன் ஆகியோருடன் மீண்டும் கலந்துரையாடவிருப்பதாகத் தெரிவித்தார்.

அதனூடாக தமிழ்த் தேசியக் கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் அந்தத் தீர்வுத் திட்ட வரைவு குறித்து ஆழமாக ஆராயவும், கலந்துரையாடவும் முடியும் என்றும் அவர் நம்பிக்கை வெளியிட்டார்.

---

**கொக்குவிலில் ஞாயிறன்று அரசியல் உரை அரங்கு**

## அநுரவின் அரசாங்கம் மரணப் பொறிக்கு உள்ளேயா? வெளியேயா?

சர்வதேச நாணய நிதியம் ஏற்கனவே ரணில் அரசாங்கத்துடன் செய்து கொண்ட கடன் ஒப்பந்தம் நாட்டிற்கு 'மரணப் பொறி' எனக் கூறிய அனுரகுமார திசாநாயக்கா தலைமையிலான தற்போதைய அரசாங்கம் மரணப் பொறிக்கு உள்ளேயா? அல்லது வெளியேயா? எனும் தலைப்பிலான அரசியல் உரை அரங்கு எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை (5) மாலை 3.30 மணியளவில் மக்கள் போராட்ட முன்னணியின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் கொக்குவில் சந்திக்கு அருகாமையில் அமைந்துள்ள தேசிய கலை இலக்கியப் பேரவையின் கவிஞர் முருகையன் கேட்போர் கூடத்தில் நடைபெறும்.

மூத்த பொதுவுடைமைவாதி சி.கா.செந்திவேல் தலைமையில் இடம்பெறவுள்ள இந்த உரை அரங்கு நிகழ்வில் அரசியல் ஆய்வாளர் டேவிட் சுரேன், பொருளியியல் ஆய்வாளர் கல்ப ராஜபக்ச, தொழிற்சங்கச் செயற்பாட்டாளர் மாக்ஸ் பிரபாகர் ஆகியோர் கலந்து கொண்டு கருத்துரைகள் ஆற்றுவர். கருத்துரைகளைத் தொடர்ந்து திறந்த கலந்துரையாடலும் இடம்பெறும்.

இதேவேளை, இந்த அரசியல் உரை அரங்கு நிகழ்வில் அரசியல் ஆர்வமுள்ளவர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு நிகழ்வின் ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர்.

---

## ஏப்ரலில் உயர்தரப் பரீட்சை முடிவுகள்

எதிர்வரும் ஏப்ரல் மாதத்திற்குள் உயர்தர பரீட்சை பெறுபேறுகளை வெளியிட எதிர்ப்பார்த்துள்ளதாக பரீட்சை ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

இடம்பெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு அவர் இதனைத் தெரிவித்தார்.

தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அவர், 'மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளுக்கு இடையில் பல கட்டங்களாக மதிப்பீட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. உயர்தரப் பரீட்சை பெறுபேறுகளை பெற்றுக் கொடுக்க சுமார் 4 மாதக்காலங்கள் தேவைப்படுகிறது. அதனை மேலும் குறைக்க நடவடிக்கை எடுத்து வருகிறோம். ஏப்ரல் மாதத்திற்குள் பெறுபேறுகளை வெளியிட முடியும் என நினைக்கிறேன்' என்றார்.

---

## வடக்கில் மீண்டும் 10 நாட்களுக்கு மழை!

**6 ஆம் திகதி புதிய தாழமுக்கம்**

வங்காள விரிகுடாவில் எதிர்வரும் 6 ஆம் திகதி மீண்டும் ஒரு தாழமுக்கம் உருவாகும் வாய்ப்புள்ளதால், இந்த தாழமுக்கம் காரணமாக எதிர்வரும் 7 ஆம் திகதி முதல் 16 ஆம் திகதி வரை வடக்கில் மழை கிடைக்கும் வாய்ப்புள்ளதாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் புவியியல் துறையின் தலைவரும், வானிலை ஆய்வாளருமான நாகமுத்து பிரதீபராஜா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது, இந்த தாழமுக்கம் வடக்கு வடமேற்குத் திசை நோக்கி நகரும் வாய்ப்புள்ளது. தற்போதைய நிலையில் இது வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் கரையோரப் பகுதியை அண்மித்தே நகரும் வாய்ப்புள்ளது (நகர்வுத் திசையும் இடங்களும் மாற்றமடையலாம்).

கடந்த 27 ஆம் திகதி வங்காள விரிகுடாவில் உருவாகிய காற்றுச் சுழற்சி மேற்கு நோக்கி நகர்ந்து தற்போது இலங்கையின் தென்மேற்காக அரபிக் கடலில் காணப்படுகின்றது. இதன் காரணமாக கடந்த-27 ஆம் திகதி முதல் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் பல பகுதிகளுக்கும் கிடைத்த வேறுபட்ட அளவுகளிலான மழை வியாழக்கிழமை (2) முதல் படிப்படியாகக் குறையுமென எதிர்பார்க்கப்படுகிறது.

கடந்த செவ்வாய்க்கிழமை (31.12.2024) வடக்கு மாகாணத்தின் பல பகுதிகளிலும் கன மழை கிடைத்துள்ளது. குறிப்பாக ஏ-9 வீதியின் மேற்குப் பகுதிகள் சில 31 ஆம் திகதி காலை 6 மணி முதல் 1 ஆம் திகதி காலை 6 மணி வரையான 24 மணித்தியாலத்தில் 80 மில்லி மீற்றரை விடக் கூடுதலாக மழைவீழ்ச்சியைப் பெற்றுள்ளன. அந்த வகையில் வெள்ளாங்குளம் 88 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சி கணேசபுரம் 86 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சி கல்விளான் 70 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சி, அம்பலப்பெருமாள் குளம் 60 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சி, மல்லாவி 55 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சி, செவ்வாய்க்கிழமை கிடைத்த கனமழை காரணமாக ஒட்டுசுட்டான், துணுக்காய், பாண்டியன்குளம், பூநகரி, முழங்காவில் இலுப்பைக்கடவை, அக்கராயன் கமநலப் பிரிவுகளின் குறிப்பிடத்தக்க அளவிலான வயல்களின் நெற்கதிர்கள் வீழந்துள்ளன. பொதுவாக இயந்திரங்கள் மூலமான அறுவடை கணிசமான அளவு சேதங்களை ஏற்படுத்தும். வீழ்ந்து கிடக்கும் நெற்கதிர்களின் அறுவடை என்பது இந்தச் சேதங்களை இன்னமும் அதிகரிக்கும் எனவும் அவர் எச்சரித்துள்ளார்.

---

## தமிழ் மக்களின் அரசியல் அபிலாகைளை நிறைவேற்றினால் புதிய அரசியலமைப்பை ஆதரிப்போம்

தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளை நிறைவேற்றினால் மாத்திரமே புதிய அரசியலமைப்பை தயாரிப்பதற்கான பூரண ஆதரவை வழங்க முடியும் என இலங்கை தமிழரசுக் கட்சியின் ஊடகப் பேச்சாளர், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் வெளிப்படுத்தியுள்ளார்.



அதிகாரப் பகிர்வு மற்றும் நிறைவேற்று ஜனாதிபதி முறையை ஒழித்தல் என்பன புதிய அரசியலமைப்பில் உள்வாங்கப்பட வேண்டும் என அவர் வலியுறுத்தியுள்ளார்.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் தலைமையிலான தற்போதைய அரசாங்கம் புதிய அரசியலமைப்பை தயாரிப்பதாக உறுதியளித்துள்ள நிலையில் அதற்கான பணிகளை விரைவில் ஆரம்பிப்பதாக அறிவித்துள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

புதிய அரசியலமைப்பு தயாரிப்பதை தற்போதைய அரசாங்கம் உடனடியாக ஆரம்பிக்க வேண்டும் எனவும் எம்.ஏ. சுமந்திரன் வலியுறுத்தியுள்ளார்.

நல்லாட்சி அரசாங்கத்தில் புதிய அரசியலமைப்பை தயாரிப்பதற்கான கலந்துரையாடல் கூட்டங்கள் அதிகளவானவற்றில் அப்போதைய மக்கள் விடுதலை முன்னணியின் உறுப்பினர்களும் கலந்துகொண்ட நிலையில் பொதுத் தேர்தலின் பின்னர் மூன்று சந்தர்ப்பங்களில் தான் ஜனாதிபதியை சந்தித்ததாகவும் அதன்போது புதிய அரசியலமைப்பு தொடர்பில் கலந்துரையாடியதாகவும் தெரிவித்தார்.

எவ்வாறாயினும், புதிய அரசியலமைப்பு தொடர்பான தனது கட்சியின் உத்தியோகபூர்வ நிலைப்பாட்டை அதற்கான பணிகளை ஆரம்பித்ததன் பின்னரே அறிவிக்க முடியும் என அவர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ISSN-2613-828X

வாரமலர்

# யாழ் களரி

Jaffna Rakaswaram

yarlgallery@gmail.com

உதயம் : 06 | 05.01.2025 - 11-01-2025 | களரி: 31

# ஒரு தேசியப் போராட்டத்தின் வெற்றியை சர்வதேச அரசியல் தான் தீர்மானிக்கும்

## அரசியல் ஆய்வாளர் சி.அ.யோதிலிங்கம் யாழ்களரிக்கு வழங்கிய பிரத்தியேக நேர்காணல்

**? தமிழ் அரசியல் கட்சிகளுடன் சிவில் அமைப்புக்கள் இணைந்து கட்டியெழுப்பிய பொதுக்கட்டமைப்பு ஜனாதிபதித் தேர்தலில் ஓரளவிற்கு வெற்றிபெற்ற போதிலும் பொதுத் தேர்தலில் வெற்றி பெறாதது ஏன்?**

தமிழ்த் தேசிய பொதுக்கட்டமைப்பு என்பது ஜனாதிபதித் தேர்தலுக்காகத் தான் உண்மையில் உருவாக்கப்பட்டது. ஜனாதிபதித் தேர்தல் என்பது தமிழ் மக்களுக்கு வெளியில் நடக்கிற ஒரு தேர்தல். தேசமாகத் திரட்டக்கூடிய வாய்ப்பு அதில் இருந்தது. குறிப்பாக இரண்டு பிரதான கட்சிகள் இதற்கு ஆதரவு தெரிவிக்காத நிலையில் கணிசமான வெற்றி கிடைத்தது.

பாராளுமன்றத் தேர்தல் என்பது தமிழ் மக்களுக்கு உள்ளுக்க நடக்கிற தேர்தல். இதுக்குள்ள தேசமாகத் திரட்டக்கூடிய வாய்ப்பு இருக்கவில்லை. பிளவுபடக்கூடியதான சூழ் நிலைதான் இருந்தது. இந்த நிலையில் சிவில் அமைப்புக்களின் பொதுச் சபை இந்தத் தேர்தலில் இருந்து நாங்கள் விலகியிப்பம் என்ற முடிவை எடுத்தது. காரணம் இது தேசத்தை திரட்ட உதவாது பிளவுபடுத்தும் என்றதற்காகத்தான் சங்குச் சின்னத்தை கூட்டமைப்பிலிருந்து கட்சிகள் எடுத்திருக்கக்கூடாது. உண்மையில் ஜனாதிபதித் தேர்தலுக்குப் பிறகு பொதுக்கட்டமைப்பு செயற்படுவதில்லை என்ற தீர்மானத்தைத்தான் எடுத்திருந்தது.

நேர்கண்டவர்:
ஜோ.ஜெஸ்ரீன்


**? ஒரு அரசியல் ஆய்வாளர் என்ற வகையில் தமிழ் மக்கள் தற்போதைய அரசாங்கத்தை நம்பி வாக்களித்ததை எவ்வாறு பார்க்கின்றீர்கள்?**


தமிழ்த் தேசிய வாக்குகள் பெரும்பாலும் 95 வீதமானவை தேசிய மக்கள் சக்திக்கு கிடைக்கவில்லை. டக்ளஸ் தேவானந்தா மற்றும் அங்கஜன், விஜயகலா மகேஸ்வரன் போன்றோருக்கு கிடைத்த வாக்குகள் தான் ஒன்றாகத் திரண்டு அவர்களுக்கு கிடைத்தது. உண்மையில் கட்சிகள் பிளவுபட்டபடியால்தான் அரசுக்கு இந்த வாக்குகள் கிடைத்திருக்கின்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் முன்னர் இருந்த தமிழரசுக் கட்சியும் ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டமைப்பும் தவராஜா தலைமையிலான சுயேட்சை குழுவும் ஒன்றாக இணைந்து போட்டியிட்டிருந்தாலே 92 ஆயிரம் வாக்குக்கு மேல வந்திருக்கும் உண்மையில் இந்த நிலையை மாற்ற வேண்டும் என்பது தான் என் கருத்து.

**? தமிழ் அரசியலில் குழப்ப நிலை ஏற்பட்டுள்ளது அதற்குக் காரணம் என்ன?**

அரசியல் கட்சிகள் தேசிய நலனில் இருந்து செயற்படாமல் கட்சி நலனிற்காக செயற்பட்டதால் தான் இந்த நிலமை ஏற்பட்டது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்குள் நடந்தவைதான் துரதிஸ்ட வசமானவை. 2009 க்கு பிறகு தமிழ் தேசிய கூட்டமைப்பில இரண்டு வகையான போக்கு வரத் தொடங்கிவிட்டது. ஒன்று மரபு ரீதியாக பின்பற்றிய தமிழ் அரசியலை தொடர்ச்சியாக பின்பற்றுவதா? இல்லை தமிழ் தேசிய அரசியலை தொடர்ச்சியாக பின்பற்ற முடியாது அதிலிருந்து விலகி தேசிய நீக்கம் செய்யப்பட்ட ஒரு இணக்க அரசியலை செய்வதா? என்ற இரண்டு போக்கு வளரத் தொடங்கியது. இந்த இரண்டு போக்கு காரணமாகத்தான் கஜேந்திரகுமார் ஆட்கள் வெளியேறி தமிழ் தேசிய மக்கள் முன்னணியை உருவாக்கினர். அதற்கு பின்னரும் அந்த இரண்டு போக்கும் மீதமாயிருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம் இருந்து இரண்டு போக்குக்குமிடையில் தொடர்ச்சியான போராட்டம் நடந்தது. இதில சம்பந்தனுக்குப் பிறகு சுமந்திரன் மேல் கையை எடுத்து அவர் ஒரு வகையான தமிழ்த் தேசிய நீக்கம் செய்யப்பட்ட அரசியலை முன் கொண்டு போவதிலதான் அவர் நிகழ்ச்சிகளைச் செய்தார். அது கிட்டத்தட்ட கொழும்பு மைய அரசியல் பிரச்சினை வந்திட்டு. கொழும்பு மைய அரசியலை முன்னெடுப்பதா? தாயக மைய அரசியலை முன்னெடுப்பதா என்று இதில கொழும்பு மைய அரசியலை முன்னெடுக்கம் செயற்பாட்டைத்தான் சுமந்திரன் எடுத்தார்.



> தேசியப் போராட்டம் தேசிய அரசினால தான் வளர்ச்சியடையும். ஒரு தேசியப் போராடதின் வெற்றியை சர்வதேச அரசியல்தான் தீர்மானிக்கும். ஆகவே சவர்தேச அரசியலை எங்களுக்கு சார்பாக திருப்ப வேண்டிய தேவையிருக்கு. சர்வதேச அழுத்தங்கள் ஊடாக ஒரு அரசியல் தீர்வை கொண்டு வருவதற்கான முயற்சிகளில் நாங்கள் இறங்க வேனும்.

தமிழரசுக் கட்சியின் மத்திய குழுவை தன்னுடைய கட்டுப்பாட்டுக்குள் வைத்துக் கொண்டு தனது விருப்பத்திற்கு ஏற்றவாறு கட்சியை நகர்த்துவதற்கு முயற்சித்தார். இதனாலதான் முதலில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு சிதைஞ்சுது இப்ப தமிழரசுக் கட்சி சிதைஞ்ச நிலமை ஏற்பட்டது. இந்த நிலமையை மாற்றுவதன் மூலம் தான் முன்னேற்றத்தைக் காண முடியும் என்று நான் நினைக்கிறன். இந்த இரண்டு போக்கும் தமிழரசுக் கட்சியின்ற வரலாறு முழுக்க இருந்தது தான். ஆனால் தாயக மைய அரசியல் மேல் நிலையில நின்றது கொழும்பு மைய அரசியலால் மேல வரமுடியவில்லை. ஆனால் இப்ப கொழும்பு மைய அரசியல் காரர் மேல்நிலையில் இருக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. தாயக மைய அரசியல் பலவீனப்படுத்தப்பட்டுள்ளது. இந்த நிலையை மாற்ற வேண்டும் இல்லை என்றால் நிறைய ஆபத்துக்களை சந்திக்க வேண்டி வரும் என்று நான் நினைக்கிறன்.

**? தமிழர்களின் பிரதான அரசியல் கட்சியாக இருந்த தமிழரசுக் கட்சி தற்போது உட்கட்சி நெருக்கடியை எதிர்கொண்டுள்ளது. அதனால் மக்களின் விருப்பம் குறைந்தள்ளதை கடந்த தேர்தலில் காண முடிகின்றது. இது தொடர்பில் உங்கள் கருத்து என்ன?**

தமிழரசுக் கட்சி மோசமாக பலவீனமடைந்துள்ளது. கொழும்பு மைய அரசியல், தாயக மைய அரசியல் இரண்டு பிரிவாக செயற்படத் தொடங்கியது. ஒன்று சுமந்திரன் பிரிவு மற்றது சிறீதரன் பிரிவு. இந்த இரண்டு பிரிவுக்குமிடையில்

மிகுதி 04 பக்கத்தில்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனித்தனியாக போனால் சர்வதேச சக்திகள் எங்களை கணக்கெடுக்கவே மாட்டார்கள்

நடந்த போராட்டத்தின் விளைவு தான் இன்றைய நிலைமை. சுமந்திரன் தன்னுடைய தரப்பை முன்னுரிமைப்படுத்தத் தொடங்கினார். தவராசா, சரவணபவன் போன்றோர் தனிஞ்சு போட்டியிடும் சூழல் உருவாகியது. இன்று மத்திய குழுவை தன்னுடைய கட்டுப்பாட்டுக்குள் வைத்துக் கொண்டு அதற்கேற்றமாதிரி நகர்த்தும் நிலமை காணப்படுகின்றது.

தமிழரசுக் கட்சி ஒன்று தான் வடக்கு, கிழக்கு முகமுள்ள ஒரு கட்சி. மற்றக் கட்சிகளுக்கு வடக்கு முகம் என்று சொல்ல முடியாது. யாழ்ப்பாண முகம் தான் இருக்கு தமிழரசுக் கட்சி பல வீனமானால் உண்மையிலே முழு தமிழ் தேசிய அரசியலும் பலவீனமாகும் சூழல் இருக்கு. அதனால் தான் கஜேந்திரகுமாரும் உணர்ந்து தமிழரசுக் கட்சி பலமிழக்கக்கூடாது என்ற அறிக்கை விட்டிருந்தார்.

இது தமிழரசுக் கட்சியின்ர சொந்த பிரச்சினையல்ல தமிழ் மக்களின்ர பிரச்சினை. இந்த நிலமைகயை நீண்ட நாளைக்கு விடேலாது. சிவில் அமைப்புக்கள் மக்கள் இதுக்குள்ள தலையிட்டு சீர்செய்யும் ஒரு முயற்சியை செய்யாவிட்டால் தமிழரசியல் படுமோசமான நிலைக்கு செல்லும் சிக்கல்கள் ஏற்படலாம்.

**? மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி தேர்தல்களுக்கு தமிழ் அரசியல் கட்சிகள் எவ்வாறு தங்களை முன்னிறுத்த வேண்டும்?**

உள்ளூராட்சி சபைத் தேர்தல் என்றாலும் சரி மாகாண சபைத் தேர்தல் என்றாலும் சரி தமிழ்த் தேசியக் கட்சிகள் ஒருங்கிணைந்து போட்டியிடும்



சூழ் நிலையை உருவாக்க வேண்டும். பிளவுபட்டுத்தான் போட்டியிட முற்படுவார்களாக இருந்தால் தேசிய மக்கள் சக்தி பல உள்ளூராட்சி சபைகளை கைப்பற்றுவதற்கான சூழல் ஏற்படும். கிழக்கு மாகாண சபை தேசிய மக்கள் சக்தி தான் கைப்பற்றும் வட மாகாண சபையில கூட அவர்கள் மேல் நிலைக்கு வரக்கூடிய சூழல் ஏற்படலாம். இது படுமோசமான அபாயத்தை தமிழர்களுக்குக் கொண்டு வரும் பெரும் தேசியவாத அரசியலுக்கு தமிழ் தேசியத்தை கரைக்கிற மாதிரியான நிலை ஏற்படும். நாங்கள் தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு தொடர்பாக எதையுமே செய்ய முடியாத நிலமை ஏற்படும். ஆகவே கட்சிகளுக்கிடையிலான முரண்பாட்டை தமிழ் மக்களுக்கு அரசியல் தீர்வு வரும் வரை ஒரு ஓரத்தில் வைக்க வேண்டும். ஒருங்கிணந்த செயற்பாட்டுக்கு முன்னுக்கு வரவேண்டும். இல்லை என்றால் மக்களுக்கு அவர்களைப் பற்றி அம்



> **தமிழரசுக் கட்சி ஒன்று தான் வடக்கு, கிழக்கு முகமுள்ள ஒரு கட்சி. மற்றக் கட்சிகளுக்கு வடக்கு முகம் என்று சொல்ல முடியாது. யாழ்ப்பாண முகம் தான் இருக்கு தமிழரசுக் கட்சி பல வீனமானால் உண்மையிலே முழு தமிழ் தேசிய அரசியலும் பலவீனமாகும் சூழல் இருக்கு.**

பலப்படுத்தி அரசியல் அரங்கத்தில் அவர்களை அகற்றுவதற்கான செயற்பாட்டை செய்வதைத் தவிர வேற வழி இருக்காது என்று நான் நினைக்கிறன். இது ஒரு அபாயகரமான நிலை

**? நீங்கள் எப்போதும் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்காக முன்னிற்கிறீர்கள். தமிழ் மக்களின் தீர்க்கப்படாத பிரச்சினைகளை அரசாங்கத்திற்கு தெரிவிக்கும் போது கிடைக்கும் பதில் மீது நம்பிக்கை வைக்க முடியுமா? நம்பிக்கை இருக்கிறதா?**

தமிழ் மக்கள் உண்மையில் ஐந்து வகையான பிரச்சினைக்கு முகம் கொடுக்கிறார்கள். ஒன்று அரசியல் தீர்வு என்பது அடிப்படை பிரச்சினை. அந்த அடிப்படை பிரச்சினை தொடர்பாக வலு உறுதியாக நிற்க வேண்டிய தேவை இருக்கின்றது.

இனப்பிரச்சினை என்றால் தமிழ் மக்கள் ஒரு தேசிய இனமாக இருப்பதை அழிக்கப்படுவதுதான் இனத்தை, மொழியை, பொருளாதாரத்தை அழிக்கிறது. கலாசாரத்தை அழிப்பதன் ஊடாக தேசத்தை தாங்கும் தூண்களை அழிப்பதற்கான செயற்பாடுகள் நடக்கிறது. ஆகவே இவற்றை அழிப்பதுதான் இனப்பிரச்சினை அரசியல் தீர்வு என்பது இந்த அழிப்பில இருந்து பாதுகாப்பதாக இருக்க வேண்டும். அழிப்பில இருந்து பாதுகாக்கிற அரசியல் தீர்வுக்கு கடுமையாக உழைக்க வேண்டிய தேவையிருக்கு.

இரண்டாவது இன அழிப்புக்கான போர்க்குற்றத்திற்கு பொறுப்புக்கூறல் செயற்பாட்டை எடுக்க வேண்டும். எங்களுக்கு நீதி வேண்டும் நீதி கோருகின்ற செயற்பாட்டை முன்னெடுக்க வேண்டிய செயற்பாடுகளுக்கான தேவை இருக்கு.

மூன்றாவது நாள் தோறும் நடக்கிற ஆக்கிரமிப்புப் பிரச்சினை இருக்க. நான்காவது இயல்பு நிலையை கொண்டுவாற பிரச்சினை இருக்கு. "அரசியல் கைதிகளின் பிரச்சினை தீரவில்லை, காணாமல் போனவர்களின் பிரச்சினை தீரவில்லை, காணி பறிப்பு பிரச்சினை தீரவில்லை அந்தப் பிரச்சினையை தீர்க்க வேண்டிய சிக்கல் இருக்கு.

ஐந்தாவது போரினால் பாதிக்கப்பட்ட மக்கள் அன்றாடம் எதிர்நோக்குகின்ற பிரச்சினை இன்றைக்கு கூட செல் துண்டுகளை நெஞ்சிலே சுமந்து பாடசாலை செல்கின்ற மாணவர்கள் இருக்கின்றார்கள். ஆகவே இந்த விடயங்களை கவனத்தில எடுக்க வேண்டிய நிலையிருக்குது. இந்தப் பிரச்சினைகள் எல்லாம் தொடர்பாக இந்த அரசாங்கம் நல்லெண்ணத்தைக் கூடக் காட்டேல்ல.

ஆக்கிரமிப்புகளை நிப்பாட்டி அரசியல் கைதிகளை விடுவித்து நல்லெண்ணத்தைக் காட்டினால் கூட இந்த அரசாங்கத்தை நம்பலாம்.

இந்தச் சூழலில் அரசாங்கத்தை நம்பக்கூடிய சூழல் இல்லை என்றே நான் நினைக்கிறன். தேசிய இனப்பிரச்சினை என்பது ஒரு சர்வதேசப் பிரச்சினை என்ற வகையில் நாங்கள் சர்வதேச ரீதியாக செயற்படுவதுதான் முன்னேற்றங்களை காணும் வழி.




**? அந்தப் பிரச்சினைகளை தீர்ப்பதற்கான உள்ளூர் பொறிமுறை ஒன்றை நீங்கள் நம்புகின்றீர்களா? அல்லது வெளிநாட்டு பொறிமுறையை நம்புகின்றீர்களா?**

தேசிய இனப்பிரச்சினை என்பது சர்வதேசப் பிரச்சினை. அது உள்ளூர் பிரச்சினையல்ல அதுக்கு சவர்தேச தீர்வுதான் இருக்கு உள்ளூர் தீர்வு இல்லை. இன்றைக்கு குறைஞ்சபட்சமாக இருக்கிற 13 ஐக் கூட சர்வதேச பிராந்திய அரசியலால் வந்த தீர்வுதான். இல்லை என்றால் அதுவும் கிடைத்திருக்காது. பேராசிரியர் சிவத்தம்பி அடிக்கடி சொல்லுவார். ஒரு தேசியப் போராட்டம் தேசிய அரசினாதான் உருவாக வேனும் என்று.

தேசியப் போராட்டம் தேசிய அரசினால தான் வளர்ச்சியடையும் . ஒரு தேசியப் போராட்டதின் வெற்றியை சர்வதேச அரசியல்தான் தீர்மானிக்கும். ஆகவே சவர்தேச அரசியலை எங்களுக்கு சார்பாக திருப்ப வேண்டிய தேவையிருக்கு. சர்வதேச அழுத்தங்கள் ஊடாக ஒரு அரசியல் தீர்வை கொண்டு வருவதற்கான முயற்சிகளில் நாங்கள் இறங்க வேனும். அதுக்கு முதல் நிபந்தனை என்னவென்றால் "தமிழ் மக்களிடம் ஒருங்கிணைந்த அரசியல் வேண்டும்" நாங்கள் தனித்தனியாக போனால் சர்வதேச சக்திகள் எங்களை கணக்கெடுக்கவே மாட்டார்கள். நாங்கள் ஒருங்கிணைந்து குரலெழும்பும் போதுதான் கணக்கெடுக்கக்கூடிய சூழலை உருவாக்கலாம்.

இன்றைக்கு எங்களின் பிரச்சினைகளை தீர்பதற்கான எங்களுக்கான ஒரு அரசியல் தீர்வை பெறக்கூடியதான ஒரு காலம் கனிஞ்சு வந்திருக்கு. அரசாங்கம் இரண்டு பெரும் நெருக்கடிக்கு முகம் கொடுக்கிறார்கள். ஒன்று பொருளாதார பிரச்சினை: சர்வதேச நாணய நிதியம் சொல்லிப்போட்டுது நீங்கள் இனப்பிரச்சினையை தீர்காமல் பொருளாதாரப் பிரச்சினையை முழுமையாகத் தீர்க ஏலாது என்று. படையினரின் எண்ணிக்கை ஒரு இலட்சமாக குறைக்க அவர்கள் கேட்கிறார்கள். இறைப்பதென்றால் இனப்பிரச்சினையை தீர்த்துதான் ஆகவேண்டும். பொருளாதார நெருக்கடி எமக்கொரு வாய்ப்பாக இருக்கிறது.

இரண்டாவது பூகோள அரசியல் போட்டிகளுக்கு இவர்கள் மாட்டுப்பட்டிருக்கின்றார்கள். பிராந்திய சவர்தேசசக்திகளின் ஒரு போட்டிக்களமாக இலங்கை வந்திருக்கு. ஆகவே அதுவும் எங்களுக்கு பல வழிகளை திறந்துவிடும்.

நாங்கள் ஒருங்கிணைந்த அரசியலை பின்பற்றுவோம் என்றால் இந்த வாய்ப்புகளை பயன்படுத்தி எங்களால முன்னுக்குப்போகக்கூடிய வாய்ப்புகள் உருவாகும்.

இந்த வாய்ப்புகளையும் நாங்கள் கவனமாக பயன்படுத்துவதற்கரிய முன்நகர்வுகளை செய்ய வேண்டும் என்பது என் அபிப்பிராயம். ●

07 ஆம் பக்கம் பார்க்க...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ் களரி

**ஆசிரியர் பீடம்**

தொலைபேசி: Whats App : 077 651 0375

மின்னஞ்சல்: yarlgallery@gmail.com

முகவரி: 28/1 ஏ.வி.வீதி கொழும்புத்துறை,யாழ்ப்பாணம்


## ஒற்றுமைதான் தமிழர்களின் மதிநுட்பம்

தமிழ் மக்களை தேசமாக திரட்ட உருவாக்கப் பட்ட பொதுக்கட்டமைப்பு ஜனாதிபதித் தேர்தலில் நல்ல முயற்சியை செய்தது போல பாராளுமன்றத் தேர்தலிலும் மறைமுக முயற்சிகளை செய்திருக்க வேண்டும்.

தமிழரசியலில் கண்ணுக்குத் தெரியாத பிரித்தாழும் அரசியல் ஒன்று ஆழ வேரூன்றி தமிழர்களை பிளவுபட்டு நிற்க வைக்கின்றது . இது தமிழ் தேசிய அரசியலை வலுவிழக்கச் செய்து வருகின்றது.

தமிழர்களை ஒற்றுமைப்படுத்தி ஓரணியில் செயற்பட வைக்கும் பொதுக் கட்டமைப்பின் பணிகள் ஜனாதிபதித் தேர்தலோடு நின்றுவிடாமல் ஒருங்கிணைந்த அரசியலை கொண்டுவந்து அரசியல் கட்சிகளையும் மக்கள் அமைப்பக்களையும் இணைத்து தமிழ் தேசிய அரசியல் பேரியக்கம் ஒன்றாக பரிணாமிக்க வேண்டும்.

தமிழ் மக்கள் ஒரு திரண்ட நிலையில் இருந்தால்தான் வடக்கில் இந்தியா– சீனா உள்ளிட்ட ஐரோப்பிய நாடுகளின் செயற்பாடுகளை எமக்கு சாதமாக திருப்பும் மதி நுட்பத்தை பற்றி சிந்திக்க முடியும். நுட்பமாக ஆராய்ந்தால் நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியை கூட வாய்பாக மாற்றக்கூடிய காலம் கணிந்திருக்கின்றது.

இனப்பிரச்சினையை தீர்காமல் பொருளாதாரப் பிரச்சினையை முழுமையாக தீர்க்க முடியாது என்று சர்வதேச நாணய நிதியம் வலியுறுத்துகின்றது. இதுவும் ஒரு நல்ல சகுணம் தான். பூகோள அரசியல் போட்டிக்களமாக இலங்கை நசிபடுகின்றது. சர்வதேச பிராந்திய சக்திகள் தன்னிலையில் செயற்பட்டாலும் இது கூட தமிழ் அரசியலில் பல வழிகளை திறக்கவுள்ளது.

தமிழ் அரசியலில் ஒற்றுமையை ஏற்படுத்த வேண்டும். பிரிந்து நின்று பாராளுமன்றத் தேர்தலில் தோல்வியை கண்டதிலிருந்து பாடத்தை கற்றுக்கொண்டு ஓரணியில் சிந்திக்கத் தவறினால் அடுத்து வரும் தேர்தல்களிலும் தேசிய மக்கள் சக்தி பெரும் வெற்றிகளை குவிக்கப் போகின்றது.

தமிழ் அரசியல் என்பது ஒரு தீர்கமான அரசியலாக மாற்றப்படவேண்டும். காலம் கனிந்திருக்கின்றது. கவனமாக எமது காலடிகளை வைத்து ஒற்றுமை சிதையாமல் செயற்பட முயல வேண்டும். இதுவே எமது மதிநூட்பமாகட்டும்.

# அநுரவின் அரசில் இந்தியப் படகுகள் வருகை அதிகரிப்பு

## யாழ்ப்பாணத்தில் இந்திய துணைத் தூதரகத்தை முற்றுகையிடுவோம்; யாழ்., மாவட்ட மீனவர்கள் தெரிவிப்பு




இந்திய இழுவை மடிப் படகுகளின் அத்துமீறல் பிரச்சினைக்கு ஜனாதிபதியும் கடற்றொழில் அமைச்சரும் சரியான ஒரு முடிவை எடுக்காவிட்டால், நாங்கள் இந்திய துணைத்தூதரகத்தை முற்றுகையிட்டு போராட்டத்தை மேற்கொள்வோம் என யாழ் மாவட்ட கடற்றொழிலாளர்கூட்டுறவு சங்க சமாசங்களின் சம்மேளன உபதலைவர் அந்தோனிப்பிள்ளை பிரான்சிஸ் இரட்ணகுமார் தெரிவித்தார்.

யாழ் மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்க சமாசங்களின் சம்மேளன அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் தெரிவிக்கையில்,


கடந்த அரசாங்கத்தின் இறுதிக் காலத்தில் ஓரளவு இந்திய இழுவைமடி படகுகள் கட்டுப்படுத்தப்பட்டு நாங்கள் தொழில் செய்து கொண்டிருந்தோம். புதிய அரசாங்கம் வந்தபின்னர் தற்போது அதிகளவிலான இந்திய இழுவைமடி படகுகள் எமது வளங்களை அள்ளிச் செல்கின்றன .

புதிதாக வந்துள்ள கடற்றொழில் அமைச்சர் சந்திரசேகரனுக்கு புதிதாக எதுவும் சொல்லத் தேவையில்லை. நாம் கடந்த காலத்தில் உண்ணாவிரதத்தை மேற்கொண்டு எமக்கு நீதி கோரினோம். நாங்கள் இந்திய இழுவை மடிப் படகுகளை கட்டுப்படுத்த கடற்றொழில் அமைச்சருக்கு பல கோரிக்கைகளை கொடுத்துள்ளோம். ஆனால் இன்றும் நெடுந்தீவில் இருந்து சுண்டிக்குளம் இடையில் இந்திய இழுவை மடிப் படகுகளின் அத்துமீறல் தொடர்ந்த வண்ணமே இருக்கின்றது. இனிமேல் இதனை பார்த்துக் கொண்டிருக்க முடியாது.

ஜனாதிபதியும் கடற்றொழில் அமைச்சரும் இதற்கு சரியான ஒரு முடிவை எடுக்காவிட்டால் நாங்கள் பழையபடி ஆர்ப்பாட்டத்தை செய்ய வேண்டிய நிலைக்கு தள்ளப்படுவோம்.

யாழில் இந்திய துணைத் தூதரகத்தை முற்றுகையிட்டு போராட்டத்தை மேற்கொள்ள யாழ் மாவட்ட கடற்றொழிலாளர்கள் தயாராக வேண்டிய நிலை ஏற்படும்.

இப்பொழுது புதிய அரசாங்கம் வந்திருக்கின்றது. நாங்கள் ஆர்ப்பாட்டம் செய்கின்றபோது தண்ணியால் அடிப்பார்கள், கட்டையால் அடிப்பார்கள் அவற்றையெல்லாம் பற்றி எங்களுக்கு பயமில்லை.



எங்களது பிரச்சினை தீர வேண்டும் என்றால் நாங்கள் போராட்டம் செய்வோம். எனவே ஜனாதிபதியும் கடற்றொழில் அமைச்சரும் இதனை கவனத்தில் எடுத்து இந்திய இழுவை மடிப் படகுகளின் அத்துமீறலை தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார். ●

## ஆதன வரி செலுத்தாத பல அரச– தனியார் நிறுவனங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை

யாழ்.வடமராட்சி நெல்லியடி நகரத்தில் அமைந்துள்ள அரச வங்கி, பிரபல பேக்கரி உள்ளிட்ட பல அரச-தனியார் வர்த்தக நிறுவனங்கள் இயங்கும் ஆதனங்களுக்கு வருடாந்தம் செலுத்த வேண்டிய நிலுவை ஆதன வரியை (சோலை வரி) கரவெட்டிப் பிரதேச சபைக்குச் செலுத்தாத காரணத்தினால் குறித்த ஆதன உரிமையாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக கரவெட்டிப் பிரதேச சபையின் செயலாளர் கணேசன் கம்ஸனாதன் அறிவித்துள்ளார்.

ஆதன வரியைச் செலுத்தாதவர்களுக்கு எதிராக 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேசசபை சட்டத்தின் 158 ஆவது பிரிவுக்கு அமைவாக எதிர்வரும் ஜனவரி மாதம்-06, 07,08 ஆம் திகதிகளில் சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தப்படவுள்ளது. குறிப்பிட்ட ஆதனங்களிலுள்ள பொருட்கள் பிரதேச சபையால் கையகப்படுத்தப்பட்டு ஏலமிடப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

குறிப்பிட்ட வர்த்தக நிறுவனங்களுக்குச் சிவப்பு அறிவித்தல் வழங்கிப் பல மாதங்களாகியும் ஆதன உரிமையாளர்கள் ஆதன வரியைக் கட்டுவதில் அசிரத்தையாகவுள்ள நிலையிலேயே இந் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செய்தித் துளிகள்...

### யாழிலிருந்து சொகுசு வாகனத்தில் கஞ்சா கடத்தல்

யாழ்ப்பாணத்திலிருந்து புதுக்குடியிருப்பிற்கு சொகுசு வாகனத்தில் கேரளா கஞ்சா கடத்திய சந்தேகநபர் ஒருவர் நேற்று திங்கட்கிழமை (30) காலை கைது செய்யப்பட்டுள்ளார்.

விஷேட அதிரடி படையினருக்கு கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில், தேராவில் தேக்கங்காடு பகுதியில் புதுக்குடியிருப்பு போக்குவரத்து பொலிஸாரின் உதவியுடன் இந்த வெகனார் வாகனத்தை மறித்து சோதனைகளை மேற்கொண்ட போது, அந்த வாகனத்தில் 6 கிலோ கேரளா கஞ்சா கைப்பற்றப்பட்டதாக புதுக்குடியிருப்பு பொலிஸார் தெரிவித்தனர்.

### ஓடிவந்த இளம் குடும்பஸ்தர் மயங்கி விழுந்து உயிரிழப்பு

திடீரென மயங்கிய இளங்குடும்பஸ்தர் ஒருவர் வைத்தியசாலைக்கு கொண்டு சென்ற போது உயிரிழந்துள்ளார்.

இவ்வாறு உயிரிழந்தவர் கரந்தன் வீதி, ஊரெழு கிழக்கைச் சேர்ந்த கிருபரஞ்சன் (வயது- 38) என்ற மூன்று பிள்ளைகளின் தந்தையாவார்.

தனியார் கல்வி நிலையத்திற்கு மகளை ஏற்றுவதற்காக மோட்டார் சைக்கிள் எடுக்கச் சென்றவர் திடீரென ஓடி வந்து மயங்கி விழுந்துள்ளார்.

இதனை அடுத்து உடனடியாக யாழ். போதனா வைத்தியாசாலைக்கு கொண்டு சென்ற நிலை அங்கு உயிரிழந்துள்ளார்.

### உணவருந்திவிட்டு உறங்கிய இளம் குடும்பப் பெண் தூக்கத்தில் உயிரிழப்பு

யாழ்ப்பாணத்தில் சாப்பிட்டுவிட்டு உறங்கிய இளம் குடும்பப் பெண் ஒருவர் தூக்கத்திலேயே உயிரிழந்துள்ளார்.

அரியாலை பகுதியை சேர்ந்த 30 வயதுடைய இளம் குடும்பப் பெண்ணே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

காலை 9 மணியளவில் உணவு அருந்திவிட்டு உறங்கியுள்ளார். பின்னர் அந்தப் பெண்ணின் தாயார் மதிய உணவுக்காக அவரை எழுப்பியவேளை அசைவற்று காணப்பட்டார்.

இந்நிலையில், அவரை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு கொண்டு சென்ற போது, அவர் ஏற்கனவே உயிரிழந்து விட்டதாக வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

### யாழ். நீதிமன்றுக்கு சாட்சிக்காக வந்தவரை வாளால் வெட்ட முயற்சித்தவர் கைது

யாழ்ப்பாணம் நீதிமன்றத்தில் உள்ள வழக்கு ஒன்றுக்கு சாட்சிக்காக வந்த நபரை வாளால் வெட்ட முயற்சித்த பிரதான சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

உள்ளூராட்சி சபைத் தேர்தலில் போட்டியிட

# இளைஞர் யுவதிகளுக்கு தமிழரசுக் கட்சி அழைப்பு

இலங்கை தமிழ் அரசுக் கட்சி ஊடாக எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் போட்டியிடுவதற்காக இளைஞர் யுவதிகள் முன்வர வேண்டும் என கட்சியின் பதில் தலைவர் சி.வி.கே.சிவஞானம் வேண்டுகோள் விடுத்தார்.

யாழ்ப்பாணம் கல்வியங்காட்டில் உள்ள தனது அலுவலகத்தில் ஊடக சந்திப்பில் கருத்து தெரிவித்த போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அடுத்த ஆண்டில் உள்ளூராட்சி சபைத் தேர்தல், மாகாண சபை தேர்தல் இடம்பெறவிருப்பதால் கட்சியின் செயற்பாடுகளை முன் கொண்டு செல்வதற்காக நான் தற்போது நியமிக்கப்பட்டுள்ளேன்.

உள்ளூராட்சி சபை தேர்தலில் ஏற்கனவே இருப்பவர்களுக்கு மட்டும் தான் கட்சி வாய்ப்பு அளிக்கும் என்ற கருத்து இருப்பதால் கட்சியுடன் சேர்ந்து பணியாற்றுவதற்கு இளைஞர்கள் பலர் முன்வருவதில்லை என்று ஒரு தகவல் இருக்கிறது. ஆனால் மீளவும் புதிய தெரிவு இடம்பெற வாய்ப்புள்ளது.

இளைஞர்கள், யுவதிகள் மூலக் கிளைகள் ஊடாக அங்கத்துவத்தைப் பெற்று இரண்டு வாரங்களுக்குள் கட்சி இணைந்து கொண்டால் கட்சி தீர்க்கமான நல்ல முடிவை எடுத்து ஆற்றலுள்ளவர்களை, கல்வி கற்றவர்களை, இளையோரை தெரிவு செய்யக்கூடிய சூழலை ஏற்படுத்தும் என்று நான் நினைக்கிறேன்.

வடக்கு கிழக்கு இணைந்த மாகாணங்களில் கட்டமைப்பு ரீதியில் இயங்குவதுடன், எல்லா மாவட்டங்களிலும் பாராளுமன்ற பிரதிநிதித்துவத்தை கொண்டுள்ள கட்சியாக இலங்கை தமிழ் அரசுக் கட்சி மாத்திரமே காணப்படுகிறது.

உள்ளூராட்சி மன்றங்களில் அனுபவம் வாய்ந்த தலைமைத்துவம் வகித்தவர்கள் எங்களுடன் இருக்கின்றார்கள்.

வடக்கு கிழக்கில் கடந்த பாராளுமன்ற தேர்தலில் நாங்கள் எதிர்பாராத விதமாக தமிழ் தேசியத்துக்கு தொய்வு ஏற்பட்டிருக்கின்ற நிலையில் அந்த இடத்திலிருந்து மீளெழுந்து உள்ளூராட்சி மன்றத்தின் தெரிவு மூலம் எங்களை நிலைநாட்டிக் கொள்வதற்கான சூழலை உருவாக்குவதற்கு எல்லோரும் ஒத்துழைக்க வேண்டும். மகளிர் இளையோர் அனைவரும் கட்சியில் இணைந்து கொள்ள வேண்டும். பொருத்தமானவர்களுக்கு நாங்கள் வாய்ப்பளிப்போம்.

உட்கட்சி விவகாரங்களில் விமர்சனங்கள், பிரச்சினைகள் வந்தாலும் அதனை சமாளித்து சீராக்கி முன்னோக்கி சென்றிருக்கிறோம் என்பதை கடந்த காலத்தில் மக்கள் நிரூபித்திருப்பார்கள். எதிர்ப்புகள் முரண்பாடுகளை சமூகமாக தீர்த்துக் கொண்டு முன்னோக்கி செல்வோம்.

75 ஆண்டு கால வரலாறு உள்ள தமிழ் அரசுக் கட்சியை கட்டிக்காப்பதற்கு அனைத்து மக்களுக்கும் அழைப்பு விடுக்கிறோம் என்றார்.

# காரைநகர் படகு கட்டும் தளம் இந்திய அரசின் 290 மில்லியன் ரூபா நிதியுதவியில் புனரமைப்பு



யாழ்ப்பாணம் காரைநகர் படகு கட்டும் தளம் இந்திய அரசாங்கத்தின் 290 மில்லியன் ரூபா (இலங்கை ரூபா) நிதியுதவியுடன் புனரமைக்கப்படவுள்ளது.

இதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா மற்றும் இந்தியாவிற்கான இலங்கையின் அப்போதைய உயர்ஸ்தானிகர் க்ஷேனுகா திரேனி செனவிரத்ன ஆகியோரால் கடந்த 16 ஆம் திகதி கைச்சாத்திடப்பட்டது.

நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கீழ் இணைக்கப்பட்டு கடற்றொழில், நீரியல் மற்றும் சமுத்திர வள அமைச்சின் கீழ் இயங்கும் Cey&Nor Foundation Ltd இன் காரைநகர் படகுத் தளத்தை புனரமைப்பதற்கு இந்தத் திட்டம் உத்தேசித்துள்ளது.

இத்திட்டம் குடிமராமத்து பணிகள் மற்றும் ஆலை, இயந்திரங்கள், உபகரணங்கள், பொருட்கள், சேவைகள் போன்றவற்றை நிறுவுதல் உள்ளிட்டவற்றை உள்ளடக்கும். புனரமைக்கப்பட்ட இந்தப் படகுத் தளம் முழுமையாகச் செயல்படத் தொடங்கியதும் , உள்ளூர் மீனவர்களின் வாழ்வாதாரத்தை அதிகரிக்கும்.

மேலும் சிறிய நிறுவனங்கள் உட்பட அப்பகுதியில் அதிக வேலை வாய்ப்புகளை உருவாக்கும். படகுத் தளம், மற்றும் தரமான மீன்வளப் பொருட்களின் விநியோகத்தை மேம்படுத்த உதவும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

# இரண்டு பிள்ளைகளும் வெளிநாட்டில் தனிமையில் வசித்தவர் சடலமாக மீட்பு

## வடமராட்சியில் சம்பவம்

தனிமையில் வசித்து வந்த வயோதிபர் ஒருவர் நேற்று திங்கட்கிழமை (30) வீட்டில் உயிரிழந்த நிலையில் சடலமாக மீட்க்கப்பட்டுள்ளார்.

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர் உச்சிக்காடு, கரணவாய் தெற்கைச் சேர்ந்த மாணிக்கம் குணசேகரம் (வயது- 65) என்பவராவார்.

இரண்டு பிள்ளைகள் வெளிநாட்டில் வசித்து வந்த நிலையில் இவர் தனிமையில் வசித்து இருந்த நிலைம (30) கட்டிலில் உயிரிழந்த நிலையில் சடலமாக காணப்பட்டுள்ளார்.

சம்பவ இடத்திற்கு சென்ற கரவெட்டி மரண விசாரணை அதிகாரி வே.பாஸ்கரன் விசாரணைகளை மேற்கொண்டு பிரேத சோதனைக்கு உத்தரவிட்டார்.

இது தொடர்பில் நெல்லியடி பொலிசார் விசாரணைகளை மேற்கொண்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்துவின் தங்கம் இசை வரலாற்றில் ஓர் அங்கம்

இலங்கையின் கல்விப்புலத்திலே அதிக வைத்தியர்களையும், பொறியியலாளர்களையும் அறிஞர்ப்பெருமக்களையும் நற்பிரஜைகளையும் உருவாக்கிய பேறும் புகழும் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியையே சாரும்.

மாணவர்கள் கற்கவும், அதன்பஜ ஒழுக்கமாய் நிற்கவும், பழகவும், அக் கல்லூரியின் அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர்களின் அதீதி ஒத்துழைப்பும் பிரயாசையும் பிரதான காரணமாகும்.

இதற்காக அனைவரையும் முதற் கண் வணங்குகின்றேன்.

இத்தகு புண்ணியம் பூக்கும் கல்லூரியில் சுமார் நான்கு தசாப்த காலமாக ஒரு சங்கீத ஆசிரியை, அதுவும் ஆண்கள் கல்லூரியில் தொடர்ந்து கற்பிப்பது என்பது இலகுவான காரியமல்ல! அதற்கு ஒரு வல்லமை தாழாத ஆளுமை இறைவனின் திருவருட் கடாட்சம் அமைந்தாலொழிய எவரும் வெல்லவே முடியாது. இந்நிலையில் சங்கீத ஆசிரியை செல்வி தங்க லட்சுமி செல்லத்துரை அவர்கள் அரும் சாதனையை வென்றிருக்கின்றார்.

முழுக்க முழுக்க ஆண் ஆசிரியர்களாக இருந்தும் வயதும், மூப்பும், அதிகாரமும், ஒழுக்க- விழுமியமும், இசைத்தமிழ் ஞானமும், உன்னதமான உடை, நடை, பாவனையும், தாயாக அரவணைக்கும் பாங்கும், மாணவர்களை வசீகரித்த மாண்பினால் யாழ் இந்துவின் தங்க மென வணங்கப்பட்டார் வணங்கப்படுகின்றார்.

*''முத்து முத்தான சித்திரங்கள் இலங்கை முற்றத்தில் சிந்திய இரத்தினங்கள் பற்றும் பாசமும் வைத்தவற்றை- நல்ல பாதையில் சேர்க்கும் பணி நமதே''*

முத்து முத்தான அழகிய மாணவர்களை நல்ல பாதையில் சேர்த்து பணியாற்றுகின்ற தாழாத கீர்த்தியையும் கோணாத கோலினையும் மாறாத வார்த்தையையும் தன்னிகரற்ற சேவையால் யாழ் இந்துவை உலகில் வரமாக்கியுள்ளார்.

இந்துக்கல்லூரியில் நடைபெறுகின்ற எத்தகைய விழாக்களாக இருந்தாலும் சரி அது தமிழ் மொழித்தினம் ஆங்கில மொழித்தினம், கணித விஞ்ஞான தினம் கண்காட்சிகள் முத்தமிழ் விழா, பட்டிமண்டபம், வரவேற்பு, துடுப்பாட்டம், விளையாட்டுப்போட்டி பாரதி நாவலர் நாயன்மார் குருபூஜை கருத்தரங்குகள் சின்னஞ்சூட்டுதல், பிரியாவிடை, மணிவிழா, பவளவிழா நூற்றாண்டு விழா என எதுவாக இருந்தாலும் கந்தபுராண கலாசாரப் பண்புகளை மேம்படுத்துகின்ற நிறைகுடம், குத்துவிளக்கு, பழம், பாக்கு, வெற்றிலை, சாம்பிராணி, பூக்கள், மாலை, தேங்காய், எண்ணெய், திரி, தீப்பெட்டி பிள்ளையார், அறுகம்புல்லு, வாழையிலை, பன்னீர், செம்பு, கற்பூரம், நெல்லு ஆகிய அத்தனை பொருட்களும் தங்கம் ஆசிரியையின் பொறுப்பில் தயார் நிலையில் வைக்கப்பட்டிருக்கும். இதன் பிரகாரம் சைவமும் தமிழும் மணங்கமழும் படியாகவும், திருநீறு, சந்தனம், குங்குமம், மங்கலம் பொங்கும்படியாகவும் தேவைப்படின் ஆராத்தித்தட்டு வேண்டும்படியாகவும் அழகான கும்ப மேமை வரமாக்கப்பட்டிருக்கும்.

மேலும் அதிபர் ஆசிரியர்கள் கூட இவரது மூப்பினால் கட்டுப்பட்டிருப்பர். இவளிடம் கல்வி கற்றவர்கள் பலர் வைத்தியர்களாகவும் அதிபர்களாகவும், பொறியியலாளர்களாகவும், விரிவுரையாளர்களாகவும், ஆசான்களாகவும் கடமை புரிகிறார்கள். தற்போதைய அதிபர் கூட அவரது மாணவனே யாவார். இதைவிட புலம்பெயர் நாடுகளில் கூட இவரது மாணவர்கள் பலமோடு வாழ்கிறார்கள். அது எல்லாம் இரவது புலமைக்குச் சான்றுகள்.

இவரது பிரதான பாடம் சங்கீதமாகும். ஆனால், இவரோ 'சங்கீதத்தை" ஒவ்வொரு மாணவனுக்கும் வாயிலே 'ஊட்டி" தீத்தியும் விடுவார். சங்கீதம் வராதவர்க்கும் எளிதாக இலகுவாகப் பாட வந்துவிடும். வாய் திறந்தால் அலுங்காரம், கீதம், வர்ணம், கீர்த்தனைகள் திருமுறைகள் நாட்டார் பாடல் என்று மாணவர்கள் பாடுவார்கள். இங்கு ஒரு தாயாக இருந்து வேண்டியதை வேண்டியவாறு கவனித்து எல்லோரையும் தரமான சங்கீத ஞானத்திற்கு வாலாய மாக்கினார்.

போட்டிகளாயினும் சரி பரீட்சையாயினும் சரி இயந்திரம்போல் உழைத்து ஒரு கரை கண்டு வெற்றியில் திளைப்பார்.

இவரது அயராத சலியாத கண்பூக்கின்ற சேவையினைக் கருத்திற் கொண்ட இந்துக்கல்லூரி சமூகம், தமிழ் சங்கம் ஊடாக அதியுயர் விருதான 'நற்றமிழ்க் காவலர் என்னும் உயர்விருதினை வழங்கிக் கௌரவித்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

மேலும் கலாபூஷணம், சங்கீத பூஷணம் மூத்த கலைஞர் விருது, கலைஞானச்சுடர் ஆகிய விருதுகளோடு யாழ் இந்துக் கல்லூரியில் கொடி கட்டிப் பறந்த இசைக்குயில் 07112024 அன்று தனது சுருதியை மௌனமாக்கி விடை

கே.எஸ்.சிவஞானராஜா

பெற்றது. யாழ் இந்துக் கல்லூரியானது தினமும் விடியும் போது செல்வி தங்க லட்சுமி செல்லத்துரை அவர்களது நாதம் எங்கும் சுருதி லயமோடு ஒலிக்கம் அதனால் அவரது ஆத்மா சாந்தி பெறும் ஓம் சாந்தி..

வட இலங்கைச் சங்கீத சபையின் அதீத வளர்ச்சியில் தம்மை அர்ப்பணித்த அம்மையார், தனது சகல செயற்பாடுகளிலும் முன்னின்று பங்காற்றியவர், சிறபாக, தியாகராஜா உற்சவம், கருத்தரங்குகள், பரீட்சைகள், பட்டமளிப்பு வைபவம், வினாத்தாள் தயாரித்தல், பரீட்சைகள் மேற்பார்வை, வளவாளராகும் திறமை, இசைக் கச்சேரி செய்தல் ஆகிய பலவாறான பணிகளில் மிகவும் திருப்திகரமாக ஆற்றிய பாங்கு, இசைவரலாற்றில் பதிவாகின்றன. ஞனாமிளிர் தங்கமாக வானுலகிலும் மிளிர்வார்.

# தமிழ்த் தேசியக் கட்சிகள் ஒருங்கிணைந்து போட்டியிடும் சூழ் நிலையை உருவாக்க வேண்டும்

**? வடக்கின் செயற்பாடுகளில் வெளிநாடுகளின் நடவடிக்கைகள் அதிகரித்துள்ளன. குறிப்பாக இந்தியா, சீனா, உள்ளிட்ட ஐரோப்பிய நாடுகளின் செயற்பாடுகள் வடக்கு தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வாக அமையுமா?**

இந்த விடயத்தில் நாங்கள் மட்டும் தான் கவனமாக இருக்க வேண்டும். பிராந்திய சக்திகள் எப்போதும் தங்களின் நலனிற்காகத்தான் செயற்படுவார்கள். ஆனால், அவர்களுடைய நலன்களிற்கும் எங்களுடைய நலன்களுக்கும் இடையில் ஏதாவது ஒரு பொதுப்புள்ளியை கண்டு பிடிச்சு அந்தப் புள்ளியை எங்களால் பலப்படுத்த முடியுமா என்பது தொடர்பாக கவனமாக யோசிக்க வேண்டும்.

அவர்கள் வட பகுதியில வந்து காலூன்றுவதற்கான சூழலை நாங்கள் உருவாக்கக்கூடாது. ஒருங்கிணைந்த அரசியலை கொண்டுவந்து தமிழ்த் தேசிய அரசியல் முபரியக்கம் ஒன்றை தொடங்க வேண்டும். அது அரசியல் கட்சிகளையும் மக்களையும் இணைப்பதால் இருக்கலாம். மக்கள் அமைப்புக்கள் மேல் நிலையில் இருப்பதற்கான ஒரு அரசியல் இயுக்கத்தை நாங்கள் உருவாக்கி செயற்பட வேண்டும். அப்படி நாங்கள் உருவாக்கும் போதுதான் எங்களால முன்னேற்றத்தை காண முடியம் என்று நான் நினைக்கிறன்.

**? இறுதியாக அரசியல் ஆய்வாளர் என்ற வகையில் தமிழ் மக்களின் பிரச்சினைக்கு தீர்வாக எவற்றைப் பார்க்கின்றீர்கள்?**

கோட்பாட்டின் அடிப்படை நான்கு;

தமிழ் மக்கள் தேசிய இனமாக அங்கீகரிக்க வேண்டும். தேசிய இனத்துக்கு இருக்கும் இறைமை அதிகாரத்தை அங்கீகரிக்க வேனும் தன்ர தலைவிதியை தானே தீர்மானிக்கின்ற சுய நிர்ணய உரிமையை அங்கீகரிக்க வேனும்.

சுயநிர்ணய உரிமையை நடைமுறைப் படுத்தும் ஆட்சிப் பொறிமுறையை உருவாக்க வேண்டும்.

அந்த ஆட்சிப் பொறிமுறை இலங்கையின்ர அதிகாரக் கட்டமைப்பில் இலங்கையின் புவிசார் அமைப்பில் தனிநாட்டுக்கான வாய்ப்புக்கள் மிகக் குறைவு. இலங்கையின் அதிகாரக் கட்டமைப்பில் சுயநிர்ணயத்தின் அடிப்படையில் ஒரு தீர்வை எப்படிக் காணலாம் என்பது தொடர்பாக கவனத்தை செலுத்த வேண்டும். அது ஒருவகையான சமஸ்டி ஆட்சித்தான்.

சுயநிர்ணய உரிமையுடைய சமஸ்டி ஆட்சியை எப்படிக் கொண்டுவாறது என்பதில் கவனம் செலுத்த வேண்டிய தேவை இருக்கு என்று நான் நினைக்கிறன்.

**அரசியல் யாப்பு சட்டவடிவம் நான்கு:**

1.தமிழ் மக்களின் தாயக ஒருமைப்பாடு வடக்கு, கிழக்கு என்பது அதிகார அலகு என்பதை ஒரு போதும் விட்டுக்கொடுக்க முடியாது. தமிழர்களின் கூட்டுரிமையை கூட்டடையாளத்தை போனுவதற்கு வடக்கு கிழக்கு இணைந்த அதிகாரம் தேவை.

இவை அடிப்படையான விடயங்கள் இதை பேச்சுவார்த்தை மேசைக்கு கொண்டு போகேலாது. அடிப்படையிலான விடயங்கள் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும்.

இதில் முஸ்லீம் மக்கள் நிலைப்பாடு என்னவாக இருக்க வேண்டும் என்பதை ஒரு வலுவான உரையாடல் நடத்த வேண்டும் அவர்கள் கேட்கிற தனி அலகு கொள்கையை கூட நாங்கள் சாதகமாக பரிசீலிக்கலாம். அதுக்கும் முஸ்லிம் மக்கள் வரவில்லை என்று சொன்னாலும் எங்களுக்கு வடக்கு, கிழக்கு இணைப்பு தேவை, வடக்கு கிழக்கில் உள்ள தமிழ் பிரசேதங்களை நிலத் தொடர்ச்சி அற்ற வகையில் வடக்கோடு இணைந்து ஒரு வடக்கு கிழக்கு அமைப்பை பூர்த்தி செய்யலாமா என்பது பற்றி யோசிப்பது நல்லது என்று நான் நினைக்கிறேன்.

2.சுய நிர்ணய அதிகாரங்களை பிரயோகிக்கக்கூடிய சுயாட்சி அதிகாரங்கள் தேவை. தமிழ் மக்கள் ஒரு தேசிய இனம் என்ற வகையிலும் நீண்ட இனவளிப்பின் காரணமாக தமிழ் மக்கள் 50 வருடம் பின் தள்ளியிருக்கினம். அத்தகைய இடைவெளிகளை நிரப்புவதற்கு தமிழ் மக்களிடம் நிறைய அதிகாரங்கள் தேவை

3. ஒரு வகையான சமஸ்டி அதிகாரம் என்றால் கூட்டும் சுயாட்சியம் என்பதுதான் அர்த்தம். தனியான நலன்களை தனியாகவும் கூட்டான நல்களை கூட்டாகவும் பார்க்கிற ஆட்சி முறைதான் சுயாட்சி முறை. மத்திய அரசில நாங்கள் தேசிய இனமாக பங்குபற்றுவதற்கு ஒரு கூட்டுப் பொறிமுறை எங்களுக்கு இருக்க வேண்டும். மத்திய அரசை ஒரு சிங்கள பௌத்த அரசாக வைத்துக் கொண்டு எந்த அதிகாரம் வழங்கினாலும் அது நடைமுறைக்குவராது.

4. வளங்கப்பட்ட சுயாட்சி அதிகாரங்களுக்கான பாதுகாப்பு ஒரு கையால கொடுத்துப் போட்டு மறுற்ணீயால பறிக்கிறது வரலாற்று நிறைய அனுபவம் இருக்கு.

சோல்பரியாப்பினுடைய 29 ஆவது பிரிவின் ஊடாக வடக்கு கிழக்கு இணைப்பு அரச கரும மொழி தொடக்கம் நிறைய அனுபவம் இருக்கு தமிழ் மக்கள் தொடர்பாக தீர்மானிக்கிற பிரதான அதிகாரம் தமிழ் மக்களிடம் இருக்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்தியாவுக்கு எதிரான பெரும் சவால்:



# பங்களாதேசில் மீள கால் பதிக்கும் பாகிஸ்தான்!

[1971க்குப் பிறகு முதல் முறையாக வங்கதேசத்துக்கு பாகிஸ்தான் ராணுவம் திரும்ப திட்டமிட்டுள்ளது. தற்போது புதிய ஆட்சியில் வங்காளதேச இராணுவத்தால் இந்திய எதிர்ப்புக் கோட்பாட்டை வலியுறுத்துவதை நோக்கமாகக் கொண்டதாக பாகிஸ்தான் இராணுவ பயிற்சிகள் உள்ளன என்று கூறப்படுகிறது]

1971-ம் ஆண்டு வங்கதேச விடுதலைக்காக பாகிஸ்தானுடன் இந்தியா நடத்திய யுத்தத்தால் தான் வங்கதேசம் என்ற ஒரு புதிய தனிநாடு உருவானது. அந்த யுத்தத்தில் பாகிஸ்தான் ராணுவ தளபதி தமது 93,000 பாகிஸ்தான் ராணுவ வீரர்களுடன் இந்தியாவிடம் சரணடைந்தார். உலக யுத்த வரலாற்றிலேயே 93,000 வீரர்கள் சரணடைந்தது வங்கதேசத்தில் இந்தியா நடத்திய யுத்தத்தில்தான்.



ஐங்கரன் விக்கினேஸ்வரா

### இந்திய பிராந்திய நலனுக்கு எதிராக:

தற்போது இந்தியாவின் பிராந்திய நலனுக்கு எதிராக 1971 ஆம் ஆண்டுக்குப் பிறகு முதன்முறையாக, பாகிஸ்தான் இராணுவம் வங்கதேசம் செல்ல உள்ளது. வங்கதேச இராணுவத்திற்கு பிப்ரவரி 2025 முதல் மைமென்சிங் கன்டோன்மென்ட் (Mymensingh cantonment) மற்றும் பிற இடங்களில் பாகிஸ்தான் ராணுவத்தால் பயிற்சி அளிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

பாகிஸ்தானின் ஒரு பகுதியாக- கிழக்கு பாகிஸ்தானாகவே வங்கதேசம் 1971-ம் ஆண்டுக்கு முன்னர் வரை இருந்தது. மொழி அடிப்படையில் கிழக்கு பாகிஸ்தானை பாகிஸ்தான் ராணுவம் ஒடுக்கி பல படுகொலைகளை செய்தது. இதனால் வங்கதேச தனிநாடு விடுதலைப் போரை முஜிபுர் ரகுமான் நடத்தினார். அவருக்காக பாகிஸ்தானுடன் இந்தியா யுத்தம் நடத்தியது. அப்போது நடந்த போரில் பல்லாயிரக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டனர். பாகிஸ்தானை வரலாற்று ரீதியாக பகைமை கொண்ட வங்கதேசம், தற்போது இந்த பயிற்சி ஒத்துழைப்பு ஒப்பந்தம் இந்தியாவிற்கு எதிரானதா எனும் கவலைகளை எழுப்பியுள்ளது. வங்கதேச இடைக்கால அதிபர் யூனுஸ் ஆட்சியின் போது அறிமுகப்படுத்தப்பட்ட புதிய ஒப்பந்தத்தின் படி, பாகிஸ்தானைச் சேர்ந்த மேஜர் ஜெனரல் தரவரிசை அதிகாரிகளால் இந்த பயிற்சி நடத்தப்பட உள்ளதாக கூறப்படுகிறது. 1971 ஆம் ஆண்டுக்குப் பிறகு முதன்முறையாக இந்திய அரசுக்கு எச்சரிக்கை மணி அடிக்கும் வகையில் பாகிஸ்தான் ராணுவம் வங்கதேசத்துடன் பிப்ரவரி 2025 முதல் தனது ராணுவத்திற்கு பயிற்சி அளிக்க ஒப்பந்தம் செய்துள்ளதாக தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

பிப்ரவரியில் மைமென்சிங் கன்டோன்மென்ட்டில் தொடங்கி பங்களாதேஷ் இராணுவத்தின் நான்கு மாநிலங்களில் பயிற்சி நடத்தப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. பங்களாதேஷ் இராணுவத்தின் பயிற்சி மற்றும் கோட்பாடு கட்டளை தலைமையகமாக மைமென்சிங்கில் உள்ளது. பாகிஸ்தானில் இருந்து வரும் மேஜர் ஜெனரல் தர அதிகாரிகள் வங்கதேச ராணுவ அதிகாரிகளுக்கு பயிற்சி அளிக்கலாம் என ஆதாரங்கள் கூறுகின்றன.

### இஸ்லாமாபாத்துடன் புதிய உறவு :

இஸ்லாமாபாத்துடன் உறவுகளை மேம்படுத்த தற்போதைய யூனுஸ் ஆட்சியின் முயற்சியின் பின்னணியில் பாகிஸ்தான் மற்றும் பங்களாதேஷ் இராணுவங்களுக்கு இடையிலான ஒத்துழைப்புக்கான இந்த ஒப்பந்தம் எட்டப்பட்டது.

பாகிஸ்தான் ராணுவத்தால் வழிநடத்தப்படும் முதல் பயிற்சித் தொகுதி ஒரு வருடம் நீடிக்கும். பாகிஸ்தான் ராணுவத்தின் கூட்டுப் படைத் தலைமை ஜெனரல் எஸ் சம்ஷாத் மிர்சாவால் வங்காளதேசத்திற்கான ராணுவ பயிற்சி வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது வங்காளதேசத்தில் இராணுவ அதிகாரிகள் மற்றும் அவாமி லீக் ஆட்சியின் கீழ் பல ஆண்டுகளாக இந்திய ஆதரவு சித்தாந்தத்துடன் வங்காளதேச இராணுவத்தின் போதனைக்கு எதிராக தற்போதய நிலமை அச்சத்தை எழுப்பியுள்ளது.

பாகிஸ்தானில் பயிற்சி பெற்ற அதிகாரிகள், 1971 இல் வங்க நாடு சுதந்திரம் அடைய முதல் இரண்டு தசாப்தங்களாக பங்களாதேஷ் இராணுவத்தில் தலைமைப் பதவிகளை வகித்தனர். இந்த பட்டியலில் ஜெனரல் ஜியாவுர் ரஹ்மான் மற்றும் லெப்டினன்ட் ஜெனரல் எச்.எம். எர்ஷாத் ஆகிய இருவரும் ஜனாதிபதிகளாக பதவியேற்றனர்.

ஆயினும் முன்னாள் அதிபர் எர்ஷாத் இந்தியாவின் தேசிய பாதுகாப்புக் கல்லூரியின் முன்னாள் மாணவர் ஆவார். இந்தியாவில் உள்ள அரசியல் தலைமையுடன் நல்ல தொடர்புகளைப் பேணி வந்தார்.

தற்போது புதிய ஆட்சியில் வங்காளதேச இராணுவத்தால் இந்திய எதிர்ப்புக் கோட்பாட்டை வலியுறுத்துவதை நோக்கமாகக் கொண்டதாக இந்தப் பயிற்சிகள் உள்ளன என்று கூறப்படுகிறது. அதேவேளை வங்கதேச அரசால் அவாமி லீக் மற்றும் ஷேக் ஹசீனா ஆகியோருக்கு நெருக்கமானவர்கள் என்று கருதப்பட்ட பங்களாதேஷ் இராணுவத்தின் தலைமை தற்போதைய ஆட்சியால் குறிவைக்கப்பட்டு அவர்கள் மீது வழக்குகள் பதிவு செய்யப்படுகின்றன.

### இந்தியாவுக்கு எதிரான பெரும் சவால்

பங்களாதேஷில் பாகிஸ்தான் ராணுவம் இருப்பது நிலத்தால் சூழப்பட்ட வடகிழக்கு இந்திய மாநிலங்களுக்கு சவாலை உருவாக்கி உள்ளது. இதற்கிடையில், கடந்த 21/12/24 வெள்ளிக்கிழமை சிட்டகாங் துறைமுகத்திற்குள் நுழைந்த கப்பல் மூலம் பாகிஸ்தானில் இருந்து வெடிபொருட்கள் பங்களாதேஷை அடைந்ததாக கூறப்படுகிறது. வெடிபொருட்களைக் கொண்ட சரக்குகளின் நோக்கம் என்ன என்பதை துறைமுக அதிகாரிகள் இன்னும் கண்டுபிடிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

### சிறுபான்மையினருக்கு எதிரான வன்முறை:

வங்கதேசத்தில் இடைக்கால அரசு ஒன்று அமைந்த போதும் இந்துக்கள் உள்ளிட்ட சிறுபான்மையினருக்கு எதிரான அட்டூழிய வன்முறைகள் வெறித்தனமாக தலைவிரித்தாடுகிறது. இந்து கோவில்கள் தாக்கப்படுவதும் இந்து அதிகாரிகள் அரசு பதவிகளில் இருந்து விரட்டியடிக்கப்படுவதும் தொடருகிறது.

### இந்திய எதிர்ப்பில் வங்கம் ?

கடந்த ஆண்டு ஆட்சி மாற்றத்தின் விளைவாக வங்கதேசத்தின் விடுதலைக்காக போராடிய வங்க தேசத்தின் தந்தை முஜிபுர் ரகுமானின் சிலையை தகர்தனர்.

அத்துடன் வங்கதேச விடுதலைக்கான யுத்தத்தின் சரித்திர சாட்சியாக இருந்த சிலையையும் வன்முறையாளர்கள் தகர்த்துள்ளனர். உலக யுத்த வரலாற்றிலேயே 93,000 வீரர்கள் சரணடைந்தது வங்கதேசத்தில் இந்தியா நடத்திய யுத்தத்தில்தான்.

இதனை வெளிப்படுத்தும் வகையில் தலைநகர் டாக்காவில் சிலை ஒன்றும் அமைக்கப்பட்டிருந்தது. வங்கதேசத்தில் மதவெறியர்கள் கை ஓங்கி இருக்கும் நிலையில் டாக்காவில் உலக யுத்த வரலாற்றின் பெருமிதமிக்க சாட்சியாக இருந்த இந்த சிலையும் தகர்க்கப்பட்டுள்ளது.

இந்திய எதிர்ப்பாளர்கள்தான் இத்தகைய நாசகார வேலைகளில் ஈடுபட்டுள்ளனர் என பலர் கருதுகின்றனர். இந்திய கலாசார மையம், கோவில்கள், இந்துக்களின் வீடுகளைத் தகர்த்தவர்கள் இப்போது 1971-ம் ஆண்டு யுத்தத்தை நினைவூட்டும் சிலையையும் தகர்த்துள்ளமை இந்திய விரோதப் போக்கை வெளிப்படுத்துகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல் சமயம்



உயிர் வாழ எதை உண்பது என்றோ, உடலுக்கு எதை உடுத்துவது என்றோ கவலை கொள்ளாதீர். காகங்களைக் கவனியுங்கள்; அவை விதைப்பதுமில்லை, அறுப்பதுமில்லை, அவற்றுக்கு களஞ்சியமும் இல்லை. கடவுள் அவற்றுக்கும் உணவு அளிக்கிறார். நீங்கள் பறவைகளைவிட மேலானவர்கள் அல்லவா? காட்டுச் செடிகள் எப்படி வளர்கின்றன எனக் கூர்ந்து கவனியுங்கள். அவை உழைப்பதும் இல்லை, நூற்பதுமில்லை. ஆனால் சாலமோன் கூடத் தம் மேன்மையிலெல்லாம் அவற்றில் ஒன்றைப்போல் அணிந்திருந்ததில்லை என நான் உங்களுக்குச் சொல்கிறேன். இன்றைக்கு இருந்து நாளைக்கு அடுப்பில் எறிப்படும் காட்டுப் புல்லுக்குக் கடவுள் இவ்வாறு அணி செய்கிறார் என்றால் உங்களுக்கு இன்னும் மிகுதியாகச் செய்வார் அல்லவா!” (லூக்கா 12:22-28) என்ற இயேசுவின் வார்த்தைகள் அவரது இறைத்தன்மையை உணர்த்துகின்றன.

**-கிறிஸ்தவம்**



மதம் என்பது மனிதனுக்கும் இறைவனுக்கும் உள்ள தொடர்பை, அதாவது வணக்க வழிபாடுகளை பற்றி பேசக் கூடியதாக இருக்கும். இஸ்லாம் சக மனிதர்களுக்கிடையே உள்ள தொடர்பு பற்றியும் பேசுகிறது. ஒரு மனிதன் தனது இறைவனுக்கு செய்ய வேண்டிய வணக்க வழிபாடுகளை சரியாக நிறைவேற்றி விட்டால் அவன் சொர்க்கம் சென்றுவிடலாம் என்பது அல்ல.. சக மனிதர்களுக்கு தொல்லை கொடுத்து அவர்களின் மன்னிப்பை பெறாமல் இறந்து விட்டால் அவன் எவ்வளவு பெரிய வணக்கசாலியாக, எவ்வளவு நன்மைகளை அடைந்திருந்தாலும் அவன் இறைவனிடம் நற்கூலி பெற முடியாது என்று வலியுறுத்துகிறது இஸ்லாம். எனவே தான் இஸ்லாம் ஒரு மதமல்ல, அது ஒரு வாழ்க்கைநெறி எனப்படுகிறது.

**-இஸ்லாம்**



மனத் துயரிலிருந்தும் துன்பங்களிலிருந்தும் விடுபடுவதே பௌத்த சமயத்தின் முக்கிய நோக்கமாகும். தன்னலம் துன்பங்களுக்கெல்லாம் காரணமாக இருக்கிறது. ஆசையை ஒழித்தால் தான் மன அமைதியும் ஆனந்தமும் அடைய முடியும். தீமைகளை தவிர்த்து நன்மைகளைச் செய்து வந்தால் ஆசை அகன்றுவிடும்.

“நான்கு உயரிய உண்மைகளும்”, “எண் வகை வழிகளும்” பிறவி என்பது ஒருவரது செயலினால் ஏற்படும் பயன் என்ற கோட்பாடும் தத்துவ இயலுக்கு புத்தர் ஆற்றிய அரிய தொண்டாகும்.

**-பௌத்தம்**



உலகில் உள்ள எல்லா உயிர்களிடமும் அன்புடன் இருக்க வேண்டும். கருணையை கைவிடக்கூடாது. இதை வலியுறுத்தவே, ‘அன்பே சிவம், அதுவே நலம்’ என்றனர். பொறுமை மற்றும் எதையும் சகித்துக் கொள்ளும் மன உறுதி வேண்டும். மற்றவர்களை நினைத்து பொறாமைப் படக்கூடாது. உடல், மனம், செயலில் எப்போதும் தூய்மையுடன் இருத்தல் வேண்டும். தன் முனைப்பின் காரணமாகவும், பேராசை காரணமாகவும் எழக்கூடிய வலி மிகுந்த உழைப்பு வேண்டும். எப்போதும் கலகலப்பாக இருக்க வேண்டும். இறுக்கமற்று இருக்க வேண்டும். எப்போதும் நல்ல நடத்தையுடன் இருக்க வேண்டும். தாராள மனதுடன் இருப்பது சிறந்தது. எல்லா மோகங்களும் வலுவற்றவை, நிலையற்றவை என்பதை உணர வேண்டும். இந்த எட்டு வகை குணங்கள் மூலம் அறம், பொருள், இன்பம், வீடு அகிய நான்கையும் பெற முடியும்.

**-இந்துமதம்**







நம்பிக்கை அதிகரிக்கும், இது நீங்கள் எடுக்கும் முடிவுகளில் சாதகமான தாக்கத்தை ஏற்படுத்தும். உங்கள் எண்ணங்களை இன்று தெளிவாக வெளிப்படுத்த முடியும். உங்கள் பணியிடத்தில் புதிய வாய்ப்புகள் காத்திருக்கும். இன்று உங்கள் படைப்பாற்றலை கொன்று கிடைக்கும் வாய்ப்புகளை தவிர்க்காமல் முயற்சிக்கவும். தனிப்பட்ட உறவுகளிலும் இன்றைய நாள் சிறப்பாக இருக்கும். இன்று உங்கள் மன ஆரோக்கியத்தில் கவனம் செலுத்த வேண்டியது அவசியம். உங்களுடைய நீண்ட நாள் திட்டங்களை நிறைவேற்றுவீர்கள். அதிர்ஷ்ட எண்: 1. அதிர்ஷ்ட நிறம்: ஆரஞ்சு




உங்கள் ஆற்றலை சரியாக பயன்படுத்துவீர்கள். நிலுவையில் உள்ள உங்கள் பணிகளை முடிப்பதில் இன்று கவனம் செலுத்துவீர்கள். உங்கள் பொறுமை வெற்றிக்கு அழைத்துச் செல்லும். தனிப்பட்ட உறவுகளிலும் இன்று நீங்கள் நேர்மறை மாற்றங்களை காண்பீர்கள். பண விஷயங்களில் கவனமாக இருக்கவும். எந்தவொரு முடிவையும் எடுப்பதற்கு முன் கவனமாக சிந்தியுங்கள். உங்களின் கடின உழைப்பின் மூலம் இன்றுபாராட்டுகளை பெறுவீர்கள்.குடும்பத்தினருக்கு செய்து கொடுத்த உறுதியை காப்பற்றுவீர்கள். அதிர்ஷ்ட எண்: 15. அதிர்ஷ்ட நிறம்: வெள்ளை




எண்ணங்களில் தெளிவு இருக்கும். எந்த ஒரு முக்கிய முடிவும் எடுப்பதில் அவசரம் காட்டாதீர்கள். நண்பர்கள் மற்றும் குடும்பத்தினருடன் நேரத்தை செலவிடுவது உங்களுக்கு மகிழ்ச்சியைத் தரும். உங்களின் தகவல் தொடர்பு திறன் இன்று மிகவும் பயனுள்ளதாக இருக்கும். இன்று ஆரோக்கியத்தில் சற்று எச்சரிக்கை தேவை. மன அழுத்தத்தைக் குறைக்க தியானத்தைப் பயிற்சி செய்யுங்கள். உங்கள் எண்ணங்களை பிறரிடம் பகிர்ந்து கொள்ள இன்று சரியான நாள். வாழ்க்கை துணையுடன் இருந்து வந்த மோதல் சரியாகும். அதிர்ஷ்ட எண்: 8. அதிர்ஷ்ட நிறம்: பர்பிள்




குடும்பத்தினருடன் உணர்ச்சிபூர்வமான பிணைப்பு வலுவாக இருக்கும். உங்கள் அர்ப்பணிப்புக்கு வெகுமதி கிடைக்கும், மேலும் உங்கள் இலக்குகளை அடைய உத்வேகம் பெறுவீர்கள். கடினமான சூழ்நிலையிலும் உங்கள் நுண்ணறிவு சரியான முடிவை எடுக்க உதவும். மனதை அமைதியாக வைக்க உங்களுக்கு பிடித்தமான செயல்களில் ஈடுபடுங்கள். அதிர்ஷ்ட எண்: 12. அதிர்ஷ்ட நிறம்: ஸ்கை ப்ளூ




நம்பிக்கை நிறைந்த நாளாக இருக்கும். உங்கள் வசீகரமான ஆளுமையால் உங்களைச் சுற்றியுள்ளவர்களைக் கவர்வீர்கள். உங்கள் யோசனைகள் மற்றும் பரிந்துரைகள் மூலம் பாராட்டுகளை பெறுவீர்கள். இன்று உங்கள் உடல்நிலையில் கொஞ்சம் கவனம் தேவை. ஓய்வு மற்றும் சிற்றுண்டிகளுக்கு சிறிது நேரம் ஒதுக்குங்கள். தியானம் மற்றும் யோகா உங்கள் மன ஆரோக்கியத்தை மேம்படுத்த உதவும். மாணவர்களுக்கு உயர் கல்வி சார்ந்து எதிர்பார்த்திருந்த வாய்ப்புகள் கிடைக்கும். குடும்பத்தில் ஒருவருக்கு ஏற்பட்ட உடல்நல குறைவு இன்று சரியாகும். அதிர்ஷ்ட எண்: 14. அதிர்ஷ்ட நிறம்: மெரூன்




இந்த வாரம்முக்கியமானதாக இருக்கும். முழு ஆற்றலையும் திரட்டி, இலக்குகளை அடைய முடிந்தவரை முயற்சி செய்ய வேண்டும். இதைச் செய்வதன் மூலம் மட்டுமே நீங்கள் விரும்பிய வெற்றியைப் பெறுவீர்கள். இந்த வாரம் வியாபாரம் அல்லது வாழ்க்கை தொடர்பான உங்களின் எந்தவொரு முக்கிய விருப்பமும் நிறைவேறும், இதன் காரணமாக உங்களை சுற்றி மகிழ்ச்சியான சூழ்நிலை இருக்கும். வெளிநாட்டில் வேலை செய்ய வேண்டும் என கனவு காணும் கன்னி ராசிக்காரர்களின் விருப்பம் நிறைவேறும். சொத்து சம்பந்தமான பிரச்சனைகள் தீரும்.

அதிர்ஷ்ட நிறம்: நீலம். அதிர்ஷ்ட எண்: 14




சில புதிய வாய்ப்புகள் கிடைக்கும். இன்று திட்டமிடலில் கவனம் செலுத்துங்கள். இது உங்கள் வெற்றிக்கு முக்கிய பங்கு வகிக்கும் உங்கள் அன்புக்குரியவர்களுடன் மனதில் மறைத்து வைத்திருக்கும் உணர்வுகளைப் பகிர்ந்து கொள்ளுங்கள். இதன் மூலம் இந்த நாள் உங்கள் உறவுகளை மேம்படுத்த ஒரு சிறந்த வாய்ப்பை வழங்குகிறது. பணம் கொடுக்கல் மற்றும் வாங்கலில் எச்சரிக்கையாக இருங்கள், புதிய முதலீடு செய்வதற்கு முன் நன்றாக யோசியுங்கள். வேலை செய்யும் இடத்தில் உயரதிகாரிகளின் ஆதரவு கிடைக்கும். அதிர்ஷ்ட எண்: 7. அதிர்ஷ்ட நிறம்: கருப்பு




திருப்திகரமான நாளாக இருக்கும். இன்று உங்களின் படைப்பாற்றல் மற்றும் உற்பத்தித்திறன் இரண்டுமே அதிகரிக்கும். உங்கள் எண்ணங்களில் தெளிவு இருக்கும், இதனால் மற்றவர்களுடன் சிறப்பாக தொடர்பு கொள்ள முடியும். உறவுகளைப் பொறுத்தவரை, உங்கள் அன்புக்குரியவர்களுடன் நேரத்தை செலவிடுவீர்கள். பரஸ்பர புரிதல் மற்றும் ஒத்துழைப்பு உங்கள் உறவை ஆழப்படுத்தும். உங்களுக்குள் இருக்கும் படைப்பாற்றலை வெளிப்படுத்த முயற்சி செய்யுங்கள். இது உங்கள் மனதை மகிழ்ச்சியாக வைக்க மட்டும் புதிய உத்வேகத்தை பெற உதவும். அதிர்ஷ்ட எண்: 13. அதிர்ஷ்ட நிறம்: மஞ்சள்




உங்களுக்கு கலவையான பலன்கள் கிடைக்கும் நாளாக இருக்கும். உங்கள் ஆழ்ந்த சிந்தனை பணியிடத்தில் எதிர்கொள்ளும் சில சவால்களை சமாளிக்க உதவும், இன்று உங்கள் ஆரோக்கியத்தை கவனித்துக் கொள்ளுங்கள். குடும்பத்தினரிடமிருந்து சரியான நேரத்திற்கு உதவி கிடைக்காததால் சற்று வருத்தத்துடன் காணப்படுவீர்கள். கையில் இருக்கும் சேமிப்பை கொஞ்சம் புத்திசாலித்தனமாக முதலீடு செய்ய நினைவில் வைத்து கொள்ளுங்கள். உங்களை நீங்களே சுய பகுப்பாய்வு செய்து கொள்ள இன்று நேரம் ஒதுக்குங்கள். அதிர்ஷ்ட எண்: 17. அதிர்ஷ்ட நிறம்: பிரவுன்




உற்சாகம் நிறைந்த நாள். உங்கள் பயணத்தில் இன்று புதிய அனுபவங்களைத் தேடுவீர்கள். சில எதிர்பாராத வாய்ப்புகளை பெறலாம். உங்களின் நேர்மறை எண்ணம் முன்னேற்றத்திற்கான புதிய வாய்ப்புகளைப் பெற உதவும். உங்கள் வாழ்க்கை துணையுடன் இன்று நேரத்தை செலவிட முயற்சிக்கவும். இந்த நாள் உங்கள் தனிப்பட்ட மற்றும் தொழில்முறை முன்னேற்றத்திற்கு ஏற்றது. கிடைக்கும் வாய்ப்புகளைப் பயன்படுத்த தயாராக இருங்கள். அதிர்ஷ்ட எண்: 10. அதிர்ஷ்ட நிறம்: நீலம்




மிதமான நன்மைகள் வந்து சேரும். உங்கள் இலக்குகளை அடைய கூடுதல் முயற்சிகளை மேற்கொள்ளுங்கள். தொழிலில் அனுபவம் பெற்ற நபர்களின் ஆலோசனை உங்களுக்கு தேவைப்படலாம். குடும்பத்தினருடன் வீண் வாக்குவாதங்களில் ஈடுபடுவதை தவிர்க்கவும். சில எதிர்பாராத செலவுகள் ஏற்பட வாய்ப்புள்ளது, எனவே செலவுகளை கட்டுக்குள் வைக்க முக்கியத்துவம் கொடுங்கள். அதிர்ஷ்ட எண்: 2. அதிர்ஷ்ட நிறம்: சிவப்பு




சிறு சிறு விஷயங்களுக்கு கோபம் கொள்ளாமல் அமைதியாக இருப்பது அவசியம். நீங்கள் பணிபுரியும் துறையில், உங்கள் எண்ணங்களை பகிர்ந்து கொள்ள உங்களுக்கு வாய்ப்பு கிடைக்கும். உங்கள் படைப்பாற்றலைப் பயன்படுத்துங்கள். இதன் மூலமாக எதிர்காலத்தில் உங்களுக்கு மிகப்பெரிய லாபங்கள் கிடைக்க கூடும். யோகா மற்றும் தியானம் செய்வதன் மூலமாக மன அழுத்தத்தில் இருந்து விடுபடுங்கள். புதிய வாய்ப்புகள் உங்கள் கதவைத் தட்டும். நினைவில் வைத்து கொள்ளுங்கள், நேர்மறையுடன் முன்னேறுவது உங்கள் வெற்றிக்கு முக்கியமாகும். அதிர்ஷ்ட நிறம்: பிங்க். அதிர்ஷ்ட எண்: 8

## யாழ்.விமானப் படைத் தளபதி வடக்கு ஆளுநருடன் சந்திப்பு

வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகத்தை, பலாலி விமானப்படைத்தளபதி குறூப் கப்டன் குமாரசிறி சம்பிரதாயபூர்மாக ஆளுநர் செயலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடினார்.


புத்தாண்டு வாழ்த்துக்களை இருவரும் பரிமாறிக்கொண்டதுடன், எதிர்காலத்தில் தொடர்ந்து சந்தித்துப் பேசுவதற்கும் தீர்மானிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கொழும்பு மீது புதுடில்லி கழுகுப்பார்வை

## சிவப்பு கம்பள வரவேற்புக்குத் தயாராகும் பெய்ஜிங்



ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க சீனாவுக்கு இம்மாத நடுப்பகுதியில் மேற்கொள்ள உள்ள அதிகாரப்பூர்வ பயணம் மற்றும் அது தொடர்பில் வெளியாகும் செய்திகள் குறித்து புதுடில்லி தீவிர அவதானம் செலுத்தியுள்ளதாக இராஜதந்திர வட்டாரங்களில் அறிய முடிகிறது.

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க இந்தியாவுக்கு மேற்கொண்ட பயணம் எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்பட்டதோ அதேபோன்று சீனாவுக்கான பயணமும் அதிமுக்கியத்துவம் வாய்ந்ததாக இராஜதந்திர வட்டாரத்தில் அவதானிக்கப்படுகிறது.

இலங்கையின் அரசியலில் செல்வாக்கும் செலுத்தும் பிரதான இரண்டு நாடுகளாக இந்தியாவும் சீனாவும் உள்ளன. இந்த இரண்டு நாடுகளையும் அமெரிக்க உட்பட மேற்குலகத்தையும்

**சு.நிஷாந்தன்**

கையாள வேண்டிய நிலையில் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க உள்ளார்.

இந்தியா, சீனா ஆகிய இரண்டு நாடுகளின் முதலீடுகளை ஈர்ப்பதற்கு இரு தரப்பையும் சமரசப்படுத்தவும் வேண்டும் என்பதால் இந்தியாவை போன்றே சீனாவுடனான உறவுகளை வலுப்படுத்த அநுரகுமார திசாநாயக்க, விரும்புவதாகவும் இந்தப் பயணம் பல நன்மைகளை இலங்கைக்கு பெற்றுக்கொடுக்கும் எனவும் அரச தரப்பினர் தெரிவிக்கின்றனர்.

என்றாலும், இந்தியாவின் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலான விவகாரங்கள் மற்றும் திட்டங்கள் தொடர்பில் இலங்கையும் சீனாவும் கலந்துரைந்துரையாடல்கள் மேற்கொள்கின்றனவா என்பது தொடர்பில் புதுடில்லி இந்த அரசாங்கம் அமைந்தது முதல் கழுகுப் பார்வை செலுத்தியுள்ளது.

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவும் தமது இந்திய பயணத்தின் போது, இந்தியாவின் தேசியப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலான எந்தவொரு விவகாரம் குறித்தும் இலங்கை அவதானமாகதான் செயல்படும் எனக் கூறியிருந்தார்.

சீன பயணத்தில் பல்வேறு ஒப்பந்தங்களில் அநுரகுமார திசாநாயக்க கைச்சாத்திட உள்ளார். குறிப்பாக இருநாடுகளுக்கு இடையிலான வர்த்தகம் மற்றும் முதலீட்டை அதிகரிப்பதற்கான வழிமுறைகள் குறித்து அவர், கவனம் செலுத்தியுள்ளதாகவும் தெரியவருகிறது.

அத்துடன், ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க, முன்வைக்கும் ஒரு திட்டத்தை முழுமையாக மானிய அடிப்படையில் செய்துக்கொடுக்கும் தூதுவொன்றை சீனஜனாதிபதி ஷி ஜின் பிங், அனுப்பியுள்ளார். அநுரகுமார திசாநாயக்க, சீனாவுடன் நெருக்கமான உறவை பேண வேண்டும் என்ற செய்தியை அவர் இந்த அன்பளிப்பின் ஊடாக தெரிவிக்க விரும்புவதாக சர்வதேச அரசியல் ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இதனால் சர்வதேச ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த பயணமாக அநுரவின் சீனப் பயணம் பார்க்கப்படுவதுடன், இதுகுறித்து புதுடில்லியும் தீவிர அவதானம் செலுத்தியுள்ளது.

என்றாலும், இலங்கை வரலாற்றில் பலம்வாய்ந்த ஒரு தலைவராகவும் ஜனாதிபதியாகவும் அநுரகுமார திசாநாயக்க



உருவெடுத்துள்ளதால் அவரை மகிழ்வித்து தமது எதிர்பார்ப்புகளை நிறைவேற்றிக்கொள்ள காத்திருக்கும் சீனா, பெய்ஜிங்கில் இந்தியாவை காட்டிலும் சிறப்பான சிவப்பு கம்பள வரவேற்பொன்றை அளிக்க தயாராகி வருவதாகவும் இராஜதந்திர வட்டாரத்தில் அறிய முடிகிறது.

# யாழ்ப்பாண இராச்சியம்

**தொடர்: 02**



**கடந்த வாரத் தொடர்ச்சி...**

இராச்சியம் டச்சுக்காரர்களால் கைப்பற்றப்பட கூடும் எனவும் அவர்கள் அஞ்சினர். ஆகையால், 1620 ஆம் ஆண்டில், அவர்கள் யாழ்ப்பாணத்தின் கடைசி மன்னரான இரண்டாம் சங்கிலியை கடற்படை மற்றும் தரைவழித் தாக்குதல் மூலமாகக் கைப்பற்றினர். சங்கிலி மன்னனின் சிலை இன்றும் Royal Palace இடிபாடுகளுக்கு அருகில் காணப்படுகிறது. பல புனித இந்து கோவில்கள் அழிக்கப்பட்டது உட்பட, உயிர்களுக்கும் சொத்துக்களுக்கும் ஏராளமான இழப்புக்கள் நிகழ்ந்தன. போர்த்துக்கேய மிஷனரி நடவடிக்கைகளின் செல்வாக்கின் கீழ் ஏற்பட்ட கிறிஸ்தவ மத மாற்றங்களின் அலை, அக்காலத்தில் பிராந்தியத்தில் ஏற்பட்ட ஒரு குறிப்பிடத்தக்க மாற்றமாகும்.

அதன் பின்னர் யாழ்ப்பாணம் பிலிப்டி ஒலிவேராவின் ஆட்சியின் கீழ் ஆளப்பட்டது. இவர் தலைநகரை நல்லூரிலிருந்து Jaffnapatao இற்கு மாற்றியதுடன், 1627 இல் அவர் இறக்கும் வரை கேப்டன்-மேஜராக பணியாற்றினார். கடற்கரை நகரமான குருநகருக்கு அருகில் அமைந்துள்ள புகழ்பெற்ற யாழ்ப்பாண துறைமுகம் அல்லது கோட்டை அவரது காலத்தில் கட்டப்பட்டது. பின்னர் இது 18 ஆம் நூற்றாண்டின் இரண்டாம் பாதியில் டச்சுக்காரர்களால் மீண்டும் கட்டப்பட்டது.

மூன்று மாத முற்றுகையைத் தொடர்ந்து, போர்த்துக்கேயர்கள் 1658 இல் டச்சு கிழக்கிந்திய கம்பெனியிடம் யாழ்ப்பாணக் கோட்டையை இழந்தனர். 140 ஆண்டுகால டச்சு காலனித்துவ ஆட்சியின் கீழ் யாழ்ப்பாணம் இருந்ததுடன், இதன்போது வர்த்தகத்திற்கான குறிப்பிடத்தக்க மையமாக மாறியது. வரலாற்றுக் கணக்குகளின்படி, டச்சுக்காரர்கள் போர்த்துக்கேயர்களை விட சகிப்புத்தன்மை உள்ளவர்களாக கருதப்பட்டனர். இந்து கோவில்கள் மற்றும் சொத்துக்களின் பெரும்பகுதி புனரமைக்கப்பட்டு, பூர்வீக மத நடைமுறைகள் அனுமதிக்கப்பட்டன. யாழ்ப்பாணக் கோட்டையின் பெரிய அளவிலான புதுப்பிப்பைத் தவிர, பிரஸ்பைடிரியன் தேவாலயங்கள் மற்றும் அரசாங்க கட்டிடங்கள் இப்பகுதியில் வளர்ச்சியடைந்தன.

1795 முதல் ஆங்கிலேயரின் காலனித்துவ ஆட்சியின் கீழ் யாழ்ப்பாணம் மேலும் முன்னேற்றமடைந்தது. இக்காலத்தில் யாழ்ப்பாண மக்களின் கல்வி மட்டம் திடீரென விருத்தி அடைய துவங்கியது. அந்த நேரத்தில் பல கிறிஸ்தவ மிஷனரிகளால் கட்டப்பட்ட பள்ளிகள் நிறுவப்பட்டதே இந்த வளர்ச்சிக்கு மிக முக்கிய காரணமாகும். கொழும்பு, கண்டி மற்றும் தீவின் பிற பகுதிகளுடன் இப்பகுதியை இணைக்கும் புதிய சாலைகள் மற்றும் புகையிரத தண்டவாளங்கள் கட்டுவது உள்ளிட்ட செழிப்பு மற்றும் வளர்ச்சியின் உயர்வு நிலைகளை ஆங்கிலேயர் காலத்தில் யாழ்ப்பாணம் கண்டது.

[redacted]

1948 இல் ஆங்கிலேயரிடமிருந்து சுதந்திரம் அடைந்ததைத் தொடர்ந்து, இனவாதத்தால் நிகழ்ந்த முப்பது ஆண்டுகால உள்நாட்டுப் போருக்குள் யாழ்ப்பாணம் சிக்குண்டது. ஒரு காலத்தில் விலைமதிப்பற்ற பாரம்பரியத்தின் ஒரு பகுதியாக விளங்கிய யாழ்ப்பாணம், பின்னர் இருபது ஆண்டுகளுக்கும் மேலாக கொந்தளிப்பான போர் மண்டலமாக மாறியது. மோதல் காரணமாக, யாழ்ப்பாண மக்களில் கணிசமான பகுதியினர் வெளிநாடுகளுக்கு அல்லது தீவின் பிற பகுதிகளுக்கு குடிபெயர்ந்தனர். 1981 ஆம் ஆண்டில் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த யாழ்ப்பாண நூலகம் எரிக்கப்பட்டது. இது பல குறிப்பிடத்தக்க புத்தகங்களையும் ஆவணங்களையும் கொண்டிருந்ததோடு ஆசியாவின் மிகப்பெரிய நூலகங்களில் ஒன்றாகவும் விளங்கியது. இது நாட்டின் வரலாற்றில் என்றும் மறவாப் பேரழிவாக கருதப்படுகிறது. 2002 ஆம் ஆண்டு சமாதான உடன்படிக்கைகளைத் தொடர்ந்து ஒரு குறுகிய கால சமாதான உறவு காணப்பட்ட போதிலும், மீண்டும் 2006 இல் ஏற்பட்ட பதட்டநிலை , 2009 இல் போர் முடியும் வரை தொடர்ந்தது.




இன்று, முப்பது ஆண்டுகால உள்நாட்டுப் போரின் காயங்கள் நகரத்தின் கட்டிடங்களின் இடிபாடுகள் மற்றும் வெடித்த கான்கிரீட்டைத் தாண்டி செல்கின்றன. யாழ்ப்பாணத்தின் பெரும்பான்மையான மக்களிடையே அதன் வடுக்கள் நீடிக்கின்றன. எவ்வாறாயினும், நகரம் அதன் துடிப்பான கலாச்சாரத்தை மீண்டும் மீளனைத்துக்கொண்டுள்ளதுடன் அதன் சமூக உறவு மீண்டும் மலர்ந்துள்ளது. போருக்குப் பிந்தைய புனரமைப்பு சிறப்பாக நடைபெற்று வருகிறது, கடந்த காலத்தின் காயங்களை குணப்படுத்தும் முயற்சிகளே பலரின் எதிர்பார்ப்பாகும்.


**தொடரும்....**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரைந்து பார்ப்போமா...



## புள்ளிகளை இணைத்து உருவத்தை கண்டுபிடியுங்கள்




## குட்டிக்கதை
# தன்னம்பிக்கை

நான் கடவுளிடம் கேட்டேன், என்னோட வாழ்க்கையை நான் எப்படி வழி நடத்துவது என்று, கடவுள் சொன்னார், உன் அறையை பார், என்று. என்னுடைய அறை எல்லா பதிலும் சொன்னது.



மேற்கூரை சொன்னதாம், உன் எண்ணங்களை உயர்வாக வை என்று. காத்தாடி சொன்னதாம், என்ன மாதிரி குளிர்ச்சியா கூலா இருக்கனும் என்று. கலெண்டர் சொன்னதாம், என்னை மாதிரி தினமும் உன்னை புதுப்பித்துக்கொள் என்று.

மனிப்பர்ஸ் சொன்னதாம், வருங்காலத்துக்காக சேமித்துக்கொள் என்று.

கண்ணாடி சொன்னதாம், உன்னை மட்டும் பார் என்று. விளக்கு சொன்னதாம், என்னை மாதிரி அடுத்தவர் வாழ்வில் ஒளி ஏற்று என்று.

ஜன்னல் சொன்னதாம், பரந்த மனப்பான்மையாக இரு என்று. தரை சொன்னதாம், எப்பவும் கீழே பணிவாக இரு என்று, படிக்கட்டு சொன்னதாம், வாழ்க்கையில் ஒவ்வொரு படியிலும் ஏறும் போதும் கவனமாக அடி எடுத்து வை என்று. இதுபூல வாழ்க்கையில் நாம் கடைப்பிடித்து வந்தால் மிக உயர்ந்த நிலைக்கு வரலாம்.

# மனப்பாடம் எப்படி செய்வது?

மனப்பாடம் செய்ய, சில பயனுள்ள குறிப்பு வழிமுறைகளை பின்பற்றலாம் பெரிய தகவல்களை சிறிய பகுதிகளாகப் பிரிக்கவும்.



ஒவ்வொரு பகுதியையும் தனித்தனியாக மனப்பாடம் செய்யவும் பலமுறை படிக்கவும். ஒவ்வொரு முறை படிக்கும் போது, தகவல் உங்கள் நினைவில் உறுதியாகும். கையேடு அல்லது காகிதத்தில் மனப்பாடம் செய்ய வேண்டிய தகவல்களை எழுதவும். எழுதுவது மனப்பாடத்திற்கு உதவும். மனப்பாடம் செய்த தகவல்களின் அடிப்படையில் கேள்விகள் எழுப்பவும் மற்றும் அவற்றுக்கு பதிலளிக்கவும்.

நீங்கள் கற்றுக்கொண்டதை மற்றவர்களுக்கு விளக்க முயற்சிக்கவும். இது உங்கள் நினைவாற்றலை அதிகரிக்கும்.

பாடல்கள் அல்லது கவிதைகள் மூலம் மனப்பாடம் செய்யும் பொழுது, தகவல்கள் விரைவில் நினைவில் நிற்கும்.

புதிய தகவல்களை நீங்கள் ஏற்கனவே அறிந்துள்ள தகவல்களுடன் தொடர்புபடுத்தி இணைப்புகளை உருவாக்கி நினைவில் கொள்ளலாம்.

இந்த முறைமைகளைப் பின்பற்றி, மனப்பாடம் செய்வது எளிதாகும்.







There is no use of believing him-
**அவனை நம்பி எந்த பிரயோஜனமும் இல்லை.**

You ask him to come here -
**அவனை இங்கு வரச்சொல்**

He asks more money for the car.
**அவன் காருக்கு அதிக பணம் கேட்கிறான்**

I live here for 30 years.-
**நான் 30 ஆண்டுகளாக இங்கு வசிக்கிறேன்.**


He is such a nice person-
**அவர் அந்த அளவுக்கு நல்லவர்**


He goes through forest
**அவன் காடு வழியாக செல்கிறான்**

எமது வாட்ஸ் ஆப் குழுவில் இணைந்து உங்கள் செல்லங்களின் ஆக்கங்களை அனுப்பி வைக்கவும்...

SCAN ME

யாழ் களரி
WhatsApp group





## வழி காட்டுங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ் கஸரி
ISSN - 2613 - 828X
No: 28/1, A.V. Road
Colombothurai, Jaffna
www.yarlgallery.com
yarlgallery@gmail.com






தேசிய கலை இலக்கிய போட்டியில் திறந்த பிரிவில் சிறுவர் கதையாக்கப் போட்டியில் தேசிய இலக்கிய விருதினை யா/ ஆவரங் கால் நடராஜ இராமலிங்க வித்தியாலய ஆசிரியர் திருமதி நிலானி பரநிருபன் அவர்கள் அலரிமாளிகையில் பெற்றுக் கொண்ட நிகழ்வின் பதிவுகள்..

## 600 காளைகளுடன் இந்த ஆண்டின் முதல் ஜல்லிக்கட்டு தொடங்கியது



பாரம்பரியமாகவே தமிழர்களின் வீர விளையாட்டாக இருக்கும் ஜல்லிக் கிட்டு, பொங்கல் தினத்தையொட்டி நடைபெறும்.

அந்த வகையில் தமிழகத்தில் முதல் ஜல்லிக்கட்டு மற்றும் அதிக ஜல்லிக் கட்டு நடைபெறும் இடமாக புதுக் கோட்டை மாவட்டம் திகழ்கிறது.

அதன்படி, இந்த ஆண்டுக்கான தமி ழகத்தின் முதல் ஜல்லிக்கட்டு போட்டி புதுக்கோட்டை மாவட்டம் கந்தர்வ கோட்டை தச்சங்குறிச்சியில் இன்று முதல் ஆரம்பமாகியுள்ளது.

இப் போட்டிக்காக பல மாவட்டங் களிலிருந்து 600 காளைகளும் 320 மாடு பிடி வீரர்களும் பங்கேற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.



நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி ஆசிரியர் திரு.சிவநாதன் அவர்கள் கொழும்பு அலரிமாளிகையில் சாரணியத்திற்கான தேசிய விருது பெற்ற மைக்காக புத்தூர் சோமஸ்கந்த கல்லூரி யில் அதிபர், ஆசிரியர் களால் நடாத்தப்பட்ட பாராட்டு நிகழ்வின் பதிவுகள்....





யாழ்ப்பாணம் சாஸ் பரமியோ நற்பணி மன்றத்தினரால். வட மாகாணத்தில் நடாத்தப்படும். அமரர் ஆன் ரோஸ் ஞாபகர்த இலவச மாணவர் படிப்பகத்தினால் மாங்குளம் புத்துவெட்டுவான் கிராமம் மற்றும் முல்லைத்தீவு மூங்கிலாறு பகுதியில் நடாத்தப்பட்ட ஒளிவிழா நிகழ்வின் தொகுப்பு.


Jaffna Rugby Club | யாழ் ரக்பி கழகம்

JAFFNA RUGBY CLUB

Building Champions, On and Off the Field

With a strong emphasis on player development, sportsmanship, and community engagement, Jaffna Rugby Club aims to inspire the next generation of rugby players while creating a lasting impact in the world of sports. Whether on or off the field, the club is dedicated to uplifting its members, nurturing talent, and promoting the values of respect and unity.





Mr. Tilak Duleep Kumar Jebasunderam
(Founder, Coach, and Captain)
& Prof Tham Nimal-Raj
(Owner & Director, Jaffna Rugby Club)

யாழ் ரக்பி கழகம்
திலக் ஜெபசுந்தரம்
(தலைவர் & பயிற்றுவிப்பாளர்)
பேராசிரியர் வைத்திய கலாநிதி
நிமல் ராஜ் தாமோதரம்
(உரிமையாளர் & நிதியாளர்

இப்பத்திரிகை 28/1 ஏ.வி.வீதி கொழும்புத்துறை பணிமனை யாழ் களரி ஆசிரியர் ஜோ.ஜெஸ்ரினால் தயாரிக்கப்பட்டு 05.01.2025 அன்று அச்சிட்டு வெளியிடப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org